
# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 193 மார்கழி 08

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், செவ்வாய், டிசம்பர் 23, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**ரஷ்ய ராணுவத்திற்காக போரிட்ட இந்திய மாணவனை கைது செய்தது உக்ரைன் படை: வீடியோ வெளியீடு**


....2-ம் பக்கம்

**கேரளாவில் தனியார் பள்ளிகள் கிறிஸ்துமஸ் விழாவுக்கு தடை: முதல்வர் பினராயி எச்சரிக்கை**

...3-ம் பக்கம்

**கிரிக்கெட் விளையாடுவதை விட்டுவிட நினைத்தேன்: மனம் திறந்த ரோகித் சர்மா**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 60 அரசுப்பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 392 புதிய வகுப்பறைக் கட்டிடங்கள், 4 ஆய்வகக் கட்டிடங்கள், மற்றும் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் விடுதிக் கட்டிடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர், வேலூர், விருதுநகர், குமரி உள்ளிட்ட 20 மாவட்டங்களில் உள்ள 60 அரசுப்பள்ளிகளில்

# ரூ.229 கோடி மதிப்பில் புதிய பள்ளி, நூலகக் கட்டிடங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, டிச. 23-

**திருப்பூர், வேலூர், விருதுநகர் உள்ளிட்ட 20 மாவட்டங்களில் 60 அரசுப்பள்ளிகளில் ரூ.229 கோடி மதிப்பில் புதிய பள்ளி, நூலகக் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.**

### முன்னோடித் திட்டங்கள்...

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழ்நாட்டின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களோடு, மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களையும் அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

### 60 அரசுப் பள்ளிகளில்

அந்த வகையில், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், நீலகிரி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 20 மாவட்டங்களில் உள்ள 60 அரசுப் பள்ளிகளில் 96.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 392 புதிய வகுப்பறைக் கட்டிடங்கள், 4 ஆய்வகக் கட்டிடங்கள், 16 மாணவர்/மாணவியர் கழிப்பறைக் கட்டிடங்களை திறந்து வைத்தார்.

### மாதிரி கட்டிடங்கள்...

கடலூர் மாவட்டம் – கடலூர் வட்டம், மஞ்சக்குப்பம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி வட்டம், கெடார் கிராமம் ஆகிய இடங்களில் 113.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் விடுதிக் கட்டிடங்கள்; பொது நூலக இயக்ககத்தின் சார்பில் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் 17.82 கோடி ரூபாய் செலவில் 20 மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 68 நூலகக் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### 3 கிளை நூலகங்கள்...

கடலூர் மாவட்டம் - காட்டுமன்னார்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் - திருவிடைமருதூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் - கீழ்வேளூர் ஆகிய இடங்களில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 கிளை நூலகக் கட்டிடங்கள்; என மொத்தம் 229 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் நூலகக் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்ட மைய நூலகத்திற்கு 4.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

# தமிழகத்தில் எதிர்பார்த்ததைவிட அதிகமான வாக்காளர்கள் நீக்கம்

## துணை முதல்வர் உதயநிதி பேட்டி

சென்னை, டிச. 23-

**தமிழ்நாட்டில் எதிர்பார்த்ததைவிட அதிகமான வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 86.40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவு நேர காப்பகத்தினை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்து காப்பகத்தில் தங்கிடும் 86 நபர்களுக்கு பாய், தலையணை, படுக்கைவிரிப்பு உள்ளிட்ட நல உதவி தொகுப்புகளை வழங்கினார்.



இதன்பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர், ஆரம்பத்தில் இருந்தே எஸ்.ஐ.ஆர். திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கான கால அவகாசம் போதாது என்று சொல்லியிருக்கிறோம். பல்வேறு மாநிலங்களில் குறிப்பாக பிகாரில் இந்த எஸ்.ஐ.ஆர். மூலமாக பலரது வாக்குகள் நீக்கப்பட்டுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வாக்காளர்களை நீக்கியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக 97 லட்சம் வாக்காளர்களும், சென்னையில் அதிகபட்சமாக 14 லட்சம் வாக்காளர்களும் நீக்கப்பட்டுள்ளனர். மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்டவர்கள், இடம் மாறியவர்கள் ஆகியோரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. எங்களுடைய முகவர்கள் மக்களுக்கு உதவுவார்கள்.

மக்களும் தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும்.

ஜன. 18 வரை கால அவகாசம் உள்ளது. விடுபட்டவர்கள் பட்டியலில் சேர்க்க படிவங்களை நிரப்பிக்கொடுக்க வேண்டும். எங்களுடைய வாக்குச்சாவடி முகவர்களைத் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவித்தார்.

# 723 செவிலியர் காலி பணியிடங்கள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் தகவல்

சென்னை, டிச. 23-

**தற்போது 723 செவிலியர் காலிப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று போராட்ட குழுவினருடன் நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் சார்பில் பணி நிரந்தரம் செய்யக் கோரி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட எம்.ஆர்.பி. செவிலியர்கள் 700-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு கிளாம்பாக்கம் புறநகர் பஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டனர்.

அங்கேயும் செவிலியர்கள் போராட்டத்தை தொடர்ந்ததால் மீண்டும் கைது செய்யப்பட்டு ஊரப்பாக்கத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் மண்டபத்தில் இருந்து வெளியேறிய செவிலியர்கள் நந்திவரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குள் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். 4-வது நாளாக ஆரம்ப சுகாதார நிலையத்திற்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்ட குழுவினர் இன்று (திங்கட்கிழமை) கிண்டியில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் ஒப்பந்த பணியில் உள்ள செவிலியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் தொகுப்பூதிய செவிலியர்களின் மகப்பேறு விடுப்பு குறித்தும் பரிசீலனை செய்யப்படும். தற்போது 723 காலி இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# பொங்கல் பரிசுத் தொகுப்போடு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும்

## தமிழ்நாடு அரசுக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, டிச. 23-

**-பொங்கல் பரிசுத் தொகுப்போடு 5000 ரூபாய் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசை எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.**



எடப்பாடியில் எம்.எல்.ஏ. திட்ட நிதியில் முடிக்கப்பட்ட பணிகளை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் எடப்பாடியில் பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அப்போது அவர் பேசுகையில், மக்கள் விரோத அரசை அகற்ற விருப்பம் உள்ளவர்கள் எங்களோடு இணைந்து கொள்ளலாம். பொங்கல் பரிசுத் தொகுப்போடு 5,000 ரூபாயை தமிழக அரசு வழங்க வேண்டும். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை, நூறு நாள் வேலைத் திட்டம் 150 நாள்களாக உயர்த்தப்படும் என தெரிவித்தது.

ஆனால் செய்தார்களா?. இன்று மத்திய அரசு 100 நாள் வேலைத் திட்டத்தை 125 நாள்களாக உயர்த்திருக்கிறது. அதனைப் பாராட்ட தி.மு.க. அரசுக்கு மனமில்லை. கல்விக் கடன் தள்ளுபடி, கேஸ் சிலிண்டர் மானியம் என தி.மு.க. அறிவித்த வாக்குறுதிகள் என்னவானது?. கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது தி.மு.க. அரசு. செவிலியர்களை பணி நிரந்தரம் செய்யாமல் தி.மு.க. அரசு திட்டமிட்டே ஏமாற்றுகிறது. எஸ்.ஐ.ஆர். நடைமுறைக்குப் பின் ஒரு கோடி வாக்குகள் நீக்கப்பட்டதாக தவறான தகவல் கூறுகின்றனர். போலி வாக்காளர்கள், இரட்டை வாக்காளர்களைத்தான் தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது. இறந்தவர்களின் பெயர்கள், போலி வாக்காளர்களை வைத்து தி.மு.க. இவ்வளவு நாள்களாக வெற்றி பெற்று வந்தது. இறந்தவர்கள் எல்லாம் தேர்தல் நேரத்தில் உயிர்பெற்று வந்து தி.மு.க.வுக்கு வாக்களித்தனர். உண்மையான வாக்காளர்கள் விடுபட்டிருந்தால் படிவத்தை பூர்த்தி செய்து மீண்டும் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு குறிப்பிட்டார்.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க

# 39 ஆயிரம் விண்ணப்பங்கள் தற்போது வரை வந்துள்ளன

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை, டிச. 23-

**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு இதுவரை 39 ஆயிரத்து 821 படிவங்கள் பெயர் சேர்ப்புக்காகவும், 413 படிவங்கள் பெயர் நீக்கத்திற்காகவும் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19-ம் தேதி வெளியிடப்பட்டது. அதில் 97 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதில் 66 லட்சம் பேர் இடம் மாறி சென்றவர்களாக காட்டப்பட்டுள்ளனர். தற்போது வாக்காளராக சேர்வதற்கு ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இடமாறி சென்ற வாக்காளர்கள், அந்த இடத்திற்கான வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் படிவம் எண் 6ஐ அளித்து தங்களை வாக்காளராக மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கு முடியும். இந்தப் படிவங்களை வாங்கும் பணியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு அரசியல் கட்சிகளின் தேர்தல் முகவர்கள் உதவி புரிந்து வருகின்றனர். தமிழகத்தில் தி.மு.க.விற்கு 65 ஆயிரத்து 210, அ.தி.மு.க.விற்கு 63 ஆயிரத்து 703, பா.ஜ.க.விற்கு 54 ஆயிரத்து 258, காங்கிரசிற்கு 27 ஆயிரத்து 158 தேர்தல் முகவர்கள் உள்ளனர். அரசியல் கட்சிகளின் தேர்தல் முகவர்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர்களிடம் சென்று அவர்களிடம் ஆறு படிவத்தை பூர்த்தி செய்து வாங்கி வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பித்து வருகின்றனர்.

அந்த வகையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு இதுவரை 39 ஆயிரத்து 821 படிவங்கள் பெயர் சேர்ப்புக்காகவும், 413 படிவங்கள் பெயர் நீக்கத்திற்காகவும் அளிக்கப்பட்டுள்ளன. இந்த தகவலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார்.

## மீண்டும் ரூ.1 லட்சத்தை தாண்டி

# தங்கம் விலை புதிய உச்சம்

சென்னை, டிச. 23-


**தங்கம் விலை நேற்று ஒரேநாளில் 2 முறை உயர்ந்து ஒரு கிராம் ரூ.12,570-க்கும் சவரனுக்கு 720 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.100560-க்கும் விற்பனையானது. ஒரு சவரன் விலை இதுவரை இல்லாத புதிய உச்சமாகும்.**

| கடைசி 5 நாட்கள் தங்கம் விலை | |
|---|---|
| 1) 22-12-2025 ஒரு பவுன் (22 காரட்) | ரூ.1,00560 |
| 2) 21-12-2025 ஒரு பவுன் (22 காரட்) | ரூ. 99,200 |
| 3) 20-12-2025 ஒரு பவுன் (22 காரட்) | ரூ. 99,200 |
| 4) 19-12-2025 ஒரு பவுன் (22 காரட்) | ரூ. 99,040 |
| 5) 18-12-2025 ஒரு பவுன் (22 காரட்) | ரூ. 99,520 |

தங்கம் விலை கடந்த சில நாட்களாக ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது. அந்தவகையில் வார தொடக்க நாளான நேற்று காலை தங்கம் விலை உயர்ந்து மீண்டும் ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை நெருங்கியது. தங்கம் விலை கிராமுக்கு 80 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.12,480-க்கும் சவரனுக்கு 640 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.99,840-க்கும் விற்பனையானது.

இந்நிலையில் நேற்று 2-வது முறையாக தங்கம் விலை உயர்ந்து ஒரு லட்சத்தை எட்டியது. அதன்படி தங்கம் விலை கிராமுக்கு 90 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.12,570-க்கும் சவரனுக்கு 720 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.100560-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 231 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 638.12 | 206.00 |
| பாயிண்ட் 85,567.48 | பாயிண்ட் 26,172.40 |



**தங்கம்**
1 சவரன் ₹1,00,560
1 கிராம் ₹12,570



**வெள்ளி**
1 கிலோ ₹231,000
1 கிராம் ₹231.00

**டாலர்** ₹89.63

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34




### ரஷ்ய ராணுவத்திற்காக போரிட்ட
# இந்திய மாணவனை கைது செய்தது உக்ரைன் படை: வீடியோ வெளியீடு

**கீவ், டிச. 23-**

ரஷ்யாவுக்காக போரிட்ட இந்திய மாணவர் உக்ரைன் படையால் தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள நிலையில் தன்னை

மீட்கக்கோரி வீடியோ வெளியிட்டுள்ளார்.



உக்ரைன் , ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 397வது நாளாக போர் நீடித்தது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனிடையே, ரஷ்யாவுக்கு படிக்க செல்லும் வெளிநாட்டு மாணவர்கள் உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதிக சம்பளம் போன்ற ஆசைகளால் படிக்க செல்லும் மாணவர்கள் பலர் ராணுவத்தில் சேரும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், குஜராத்தை சேர்ந்த முகமது ஹுசைன் என்ற மாணவர் ரஷ்யாவுக்கு உயர் கல்வி படிக்க சென்றுள்ளார். ஆனால், அவர் ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்த நிலையில் போரில் உக்ரைன் படைகளால் கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது உக்ரைனில் கைதியாக உள்ள முகமது ஹுசைன் தன்னை மீட்குமாறு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். முகமது உக்ரைன் ராணுவத்தின் பிடியில் உள்ள நிலையில் அவர் பேசும் வீடியோவை உக்ரைன் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

### எஞ்சின் கோளாறு காரணமாக
# டெல்லியில் அவசரமாக தரையிறங்கிய விமானம்

**டெல்லி, டிச. 23-**

எஞ்சின் கோளாறு காரணமாக டெல்லியில் அவசர அவசரமாக ஏர் இந்தியா விமானம் தரையிறக்கப்பட்டது.

தலைநகர் டெல்லியில் இருந்து மராட்டிய மாநிலம் மும்பைக்கு நேற்று காலை ஏர் இந்தியா விமானம் புறப்பட்டது. விமானத்தில் 335 பேர் பயணித்தனர். இந்நிலையில், விமானம் நடு வானில் பறந்து கொண்டிருந்தபோது அதில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதை அறிந்த விமானி உடனடியாக விமானத்தை டெல்லி விமான நிலையத்தில் அவசர அவசரமாக தரையிறக்கினார்.

இந்த சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. அதேவேளை, விமான பயணம் கால தாமதம் ஏற்பட்டதால் பயணிகளை மாற்று விமானம் மூலம் மீண்டும் மும்பைக்கு அனுப்பி வைக்க ஏர் இந்தியா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.



**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை, நேற்று தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய திருச்சபையின் அருட்தந்தை ரூபன் மார்க், பொதுச் செயலாளர் வழக்கறிஞர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, துணை அருட்தந்தை வி.எஸ். பிரான்சிஸ், தூத்துக்குடி நஜரத் பிஷப் (பொறுப்பு) அருட்தந்தை ஐசக் வரபிரசாத். சி.எஸ்.ஐ பிஷப் அருட்தந்தை ஹேமச்சந்திர குமார், வேலூர் பிஷப் அருட்தந்தை சர்மா நித்யானந்தம், மதுரை பிஷப் அருட்தந்தை ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன், சென்னை பிஷப் அருட்தந்தை பால் பிரான்சிஸ், ஈரோடு பிஷப் அருட்தந்தை ஜேக்கப் லிவிங்ஸ்டன், திருச்சி பிஷப் அருட்தந்தை ரெ.சாமுவேல் ராஜதுரை, கன்னியாகுமரி பிஷப் அருட்தந்தை கிறிஸ்டோபர் விஜயன், இயக்குநர் அருட்தந்தை கிறிஸ்டோபர் தர்மராஜ், செயலாளர் எபினேசர், ஹாமில்டன் ஆகியோர் சந்தித்து கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.**

# நைஜீரியாவில் கடத்தப்பட்ட 130 பள்ளிக்குழந்தைகள் மீட்பு

**அபுஜா, டிச. 23-**

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் ஐ.எஸ்., அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இதனிடையே, அந்நாட்டின் நைஜர் மாகாணம் பம்பிரி நகரில் உள்ள பள்ளிக்கூடத்திற்குள் கடந்த மாதம் 21ம் தேதி துப்பாக்கியுடன் நுழைந்த பயங்கரவாதிகள் அங்கிருந்த ஆசியரிகள், மாணவ, மாணவியர் என 315 பேரை கடத்தி சென்றனர். இதில் பயங்கரவாதிகளிடமிருந்து 50 பள்ளிக்குழந்தைகள் தப்பினர். பின்னர், இம்மாத தொடக்கத்தில் 101 குழந்தைகளை பயங்கரவாதிகள் விடுதலை செய்தனர்.

இந்நிலையில், பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட பள்ளிக்குழந்தைகளில் 130 பேரை ராணுவம் அதிரடியாக மீட்டுள்ளது. எஞ்சிய 30க்கும் மேற்பட்ட பள்ளிக்குழந்தைகளின் நிலை குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. அதேவேளை, பள்ளிக்குழந்தைகள் யாரும் பணய கைதிகளாக இல்லை என்று அதிபர் பயோ தெரிவித்துள்ளார்.

# ஆயிரத்திற்கும் மேற்பட்ட டிரோன்கள் மூலம் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்
## ஜெலன்ஸ்கி கடும் குற்றச்சாட்டு

**கீவ், டிச. 23-**

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட டிரோன்கள் மூலம் உக்ரைன் மீது ரஷ்ய படை தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கடுமையாக குற்றச்சாட்டியுள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. நேட்டோவில் சேரும் முடிவை உக்ரைன் கைவிட கோரியும், ராணுவ நடவடிக்கை என்ற பெயரிலும் ரஷ்யா போரில் ஈடுபட்டு வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷ்யாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி உள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டு உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதேபோன்று, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலருடனும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தொடர்ந்து பேசி வருகிறார்.

இந்நிலையில் ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் பேசும்போது, உக்ரைனுக்கு எதிராக கடந்த வாரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட டிரோன் தாக்குதல்களை ரஷ்யா நடத்தியுள்ளது என கூறியுள்ளார். இதன்படி, 1,300 டிரோன் தாக்குதல்களும், 1,200 வான்வழி குண்டுகளையும், 9 ஏவுகணைகளையும் வீசி ரஷ்யா தாக்கியுள்ளது என கூறியுள்ளார்.

இதுபற்றி குறிப்பிட்ட அவர், பல்வேறு நாடுகளும் உதவி அளித்து வருகின்றன. ஐரோப்பிய கவுன்சில் 9 ஆயிரம் கோடி யூரோக்களை ஒதுக்கீடு செய்துள்ளது. நார்வே மற்றும் ஜப்பான் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. போர்ச்சுகல் நாட்டுடன் கடல்சார் டிரோன் ஒப்பந்தமும் போடப்பட்டு உள்ளது என்று கூறினார்.

### வீட்டுக்காவலில் வைக்கக்கோரிய
# மலேசிய முன்னாள் பிரதமரின் நஜீப் கோரிக்கையை நிராகரித்தது கோர்ட்

**கோலாலம்பூர்,டிச. 23-**



சிறையில் உள்ள தன்னை வீட்டுக்காவலில் வைக்கக் கோரி நஜீப் ரசாக் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட் நஜீப் ரசாக்கை வீட்டுக்காலில் வைக்க அனுமதி மறுத்துவிட்டது.

மலேசியாவில் கடந்த 2009ம் ஆண்டு முதல் 2018 வரை தொடர்ந்து 9 ஆண்டுகள் பிரதமராக இருந்தவர் நஜீப் ரசாக். இவர் பதவியில் இருந்தபோது மலேசிய மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 75 கோடி (இந்திய மதிப்பில்) ஊழல் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது.

3 ஆண்டுகள் நடந்த இந்த விசாரணையில் நஜீப் ரசாக் குற்றவாளி என 2022ம் ஆண்டு கோர்ட்டு தீர்ப்பளித்தது. அவருக்கு 12 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, மேல் முறையீட்டிற்குப்பின் சிறை தண்டனை 6 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. அதேவேளை, நஜீப் ரசாக் வீட்டுக்காவலில் இருக்க முன்னாள் மன்னர் சுல்தான் அப்துல் அகமது ஷா ஆணை பிறப்பித்தார். நஜீப் ரசாக் தனது எஞ்சிய தண்டனை காலத்தை வீட்டுக்காவலில் கழிக்கலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், முன்னாள் மன்னரின் ஆணையை நிறைவேற்றும் வகையில் சிறையில் உள்ள தன்னை வீட்டுக்காவலில் வைக்கக்கோரி நஜீப் ரசாக் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட் நஜீப் ரசாக்கை வீட்டுக்காலில் வைக்க அனுமதி மறுத்துவிட்டது. மேலும், முன்னாள் மன்னர் அகமதுவின் ஆணை அரசியலமைப்பிற்கு எதிராக உள்ளதாக கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.

# இந்தோனேசியாவில் விபத்து - 15 பேர் பலி

**ஜகார்த்தா, டிச. 23-**

இந்தோனேசியாவில் நடந்த பேருந்து விபத்தில் 15 பேர் பலியாயினர். மேலும், 19 பேர் காயமடைந்தனர்.

ஆசியாவில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. இந்நாட்டின் தலைநகர் ஜகார்தாவில் இருந்து ஜாவா தீவில் உள்ள யோக்யகர்த்தா நகருக்கு பேருந்து சென்றுகொண்டிருந்தது. அந்த பேருந்துசில் 34 பேர் பயணித்தனர். இந்நிலையில், ஜாவா தீவின் செமரங் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 15 பேர் பலியாயினர். மேலும், 19 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பாதுகாப்பு, அமைதியான மாநிலம் தமிழ்நாடு:
# த.வெ.க. கிறிஸ்துமஸ் விழாவில் ஆற்காடு நவாப் முகமது பேச்சு

**சென்னை, டிச. 23-**




ஒற்றுமைக்கு சிறந்த முன்னுதாரணமான மாநிலமாகவும், அமைதியான மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்று ஆற்காடு நவாப் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் த.வெ.க. சார்பில் நடைபெற்ற சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் கட்சியின் தலைவர் விஜய் கலந்துகொண்டார். இந்தநிலையில் த.வெ.க.வின் சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில், அக்கட்சித் தலைவர் விஜய் முன்னிலையில் ஆற்காடு நவாப் முகமது அலி கலந்து கொண்டு பேசியதாவது:-

வணக்கம். நான் முஸ்லிம் மதத்தை பின்பற்றுகிறேன். ஆனால் எனது மகன் பெயர் ஜீசஸ். மூத்த மகன் பெயர் ஆப்ரகாம். நாங்களும் மேன்மை தாங்கிய இயேசு கிறிஸ்து, அன்னை மேரி மீது நம்பிக்கை வைத்து இருக்கிறோம். அப்படி இல்லையெனில் நாங்கள் முஸ்லிமே அல்ல. நான் இயேசு கிறிஸ்துவை நம்பவில்லை எனில் நான் முஸ்லிமே கிடையாது. நான் இயேசு கிறிஸ்து மீது நம்பிக்கை வைக்க வேண்டும்; அது தான் என்னை உண்மையான முஸ்லிம் ஆக்குகிறது.

ஒற்றுமைக்கு சிறந்த முன்னுதாரணமான மாநிலமாகவும், அமைதியான மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பான மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது என்றார். த.வெ.க. தலைவர் விஜய் தொடர்ந்து தி.மு.க. அரசை விமர்சனம் செய்து வரும் நிலையில்,ஆற்காடு நவாப்பின் இந்த பேச்சு சமூகவலைதளங்களில் பேசும் பொருளாகி உள்ளது.

**23-12-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** விருந்தினர் வருகையால் இல்லத்தரசிகளுக்கு வேலைப்பளு கூடும். அரசு ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

**ரிஷபம்:-** தெய்வ சிந்தனையால் குடும்பத்தோடு புனிதப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். இறையருளால் குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும்.

**மிதுனம்:-** கடன் கொடுத்தவர்களால் தொல்லை அதிகரிக்கும். அதனால் குடும்பத்தில் நிம்மதி, குறையும். கருத்து வேறுபாடுகள் எழலாம். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது.

**கடகம்:-** புதிய கலைப் பயிற்சிகளில் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் அல்லது வியாபார மூலமான வரவு திருப்திகரமாக இருக்கும்.

**சிம்மம்:-** வியாபார விரிவாக்கங்கள் வெற்றி பெற்று, எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:-** கஷ்டங்கள் அதிகம் காணப்படவில்லை என்றாலும், காரியத்தடைகள் குறிகாட்டப்படுகின்றன. குடும்பத்தினருடன் கருத்துவேறுபாடுகள் எழலாம். வேதனைகளைச் சாதனைகளாக மாற்றுங்கள்.

**துலாம்:-** வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம். குடும்பத்தினர் தேவையற்ற பொருள்களை வாங்க வலியுறுத்துவர். கூட்டாளியிடம் எச்சரிக்கையுடன் இருந்தால் ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்:-** புதிய கூட்டாளி ஒருவர் உங்கள் வியாபாரம் அல்லது தொழிலில் கை கோர்க்கலாம். அரசு ஆதரவு, அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கும் அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**தனுசு:-** வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. மனைவி, மக்களின் உடல் நிலையால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். மேலதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் மேன்மை அடையலாம்.

**மகரம்:-** மேல் வருமானத்திற்கான புதிய வழிகள் உருவாகலாம். தாராளமான பணவரவுகளால் குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றிவைப்பீர்கள். இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்:-** பெண்களால் கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகன விபத்தைத் தவிர்க்க வண்டியில் மெதுவாகச் செல்லவும். உறவுகளுடனான கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க முயலவும்.

**மீனம்:-** புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம். புதிய சேமிப்புக்களில் முதலீடு செய்ய முனைவீர்கள். வலுவான உயர் அதிகாரிகளின் உதவியால் நினைத்ததைச் சாதித்துக் கொள்வீர்கள்.

### வங்காளதேசத்தில்
# இந்து வாலிபர் படுகொலை சம்பவத்தில் 12 பேர் கைது

**டாக்கா, டிச. 23-**

வங்காளதேசத்தில் இந்து வாலிபர் கொடூர கொலை மற்றும் உடல் எரிப்பு தொடர்பான வழக்கில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் அறிவித்து உள்ளார்.

வங்காளதேச நாட்டில் கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த அரசுக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் தொடர்ச்சியாக ஆளும் அரசு கவிழ்ந்தது. அப்போது பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, கடந்த ஆண்டு ஆகஸ்டு 5-ந் தேதி சகோதரியுடன் நாட்டை விட்டு வெளியேறி, உயிர் தப்பினார். அவர் இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார்.

இதன் பின்னர், பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையில் வங்காளதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. நாட்டின் தலைமை ஆலோசகராக யூனுஸ் செயல்பட்டு வருகிறார். கடந்த ஆண்டு ஜூலை மாதம் கிளர்ச்சியில் ஈடுபட்ட முக்கிய தலைவர்களில் ஒருவரான ஷெரீப் உஸ்மான் ஹாதி (வயது 32) இங்குலாப் மாஞ்சா என்ற அமைப்பை நிறுவி அரசியலில் ஈடுபட்டார்.

அவர் தலைநகர் டாக்காவின் பிஜோய்நகர் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பினர். இந்நிலையில், சில நாட்களாக சிங்கப்பூரில் தீவிர சிகிச்சை பெற்று வந்த அவர், கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்து விட்டார். அவருடைய மரணம் தொடர்ச்சியாக வங்காளதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறை வெடித்தது.

இதில், முன்னாள் கல்வி மந்திரி மொகிபுல் ஹசன் சவுத்ரியின் வீடு கொளுத்தப்பட்டது. வங்காளதேசத்தின் நிறுவன தந்தையான ஷேக் முஜிபுர் ரகுமானின் வீடும் சூறையாடப்பட்டது. இந்திய துணைத்தூதரின் வீடு மீதும் கல்வீச்சு சம்பவம் நடந்தது.

இந்த சூழலில், வங்காள தேசத்தில் மைமன்சிங் நகரை சேர்ந்த திபு சந்திர தாஸ் (வயது 25) என்ற வாலிபர் துணி தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்திருக்கிறார். அவர், மத நிந்தனை செய்து விட்டார் என கூறி அவருடைய ஆடைகளை களைந்து, நிர்வாணப்படுத்தி, ஒரு கும்பல் தொங்க விட்டுள்ளது. பின்னர் கம்பத்தில் கட்டி வைத்து, அடித்து கொலை செய்தது. இதன் பின்னர் அவருடைய உடலை சாலையில் போட்டு, தீ வைத்து எரித்த கொடூர சம்பவம் நடந்துள்ளது. இந்த சம்பவத்திற்கு ஆளும் இடைக்கால அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில், வங்காள தேசத்தில் இந்து வாலிபர் கொடூர கொலை மற்றும் உடல் எரிப்பு தொடர்பான வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 19 முதல் 46 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். இதனை இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் அறிவித்து உள்ளார். அவர்களில் 7 பேரை விரைவு அதிரடி படையினரும், மீதமுள்ள 3 பேரை போலீசாரும் கைது செய்தனர்.

இந்நிலையில், வங்காள தேச போலீசார் மற்றும் விரைவு அதிரடி படையினர் வெளியிட்ட தகவலின்படி தற்போது மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டனர். இதனால், மொத்த கைது எண்ணிக்கை 12 ஆக உயர்ந்து உள்ளது. அவர்கள் ஆஷிக் (வயது 25) மற்றும் கையூம் (வயது 25) என அடையாளம் காணப்பட்டு உள்ளனர்.

# கார் குண்டு வெடிப்பில் ரஷ்ய ராணுவ ஜெனரல் பலி

**மாஸ்கோ, டிச. 23-**



ரஷ்ய ராணுவத்தின் உயர் அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் பனில் சர்வரோவ், மாஸ்கோவில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜெனரல் பயணித்த காரில் பொருத்தப்பட்டிருந்ததாக கூறப்படும் குண்டு வெடிக்கச் செய்யப்பட்டு அவர் கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

ரஷ்ய பொது ஊழியர்களின் செயல்பாட்டு பயிற்சித் துறையின் தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் பனில் சர்வரோவ் செயல்பட்டு வந்துள்ளார். இந்த கார் குண்டு வெடிப்பு தொடர்பாக புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், உக்ரைனிய உளவுத்துறை சேவைகள் சம்பந்தமாக இந்த தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என்று புலனாய்வுத்துறை அதிகாரிகள் சந்தேகத்துள்ளனர். எதுவாயினும், இந்தக் குற்றச்சாட்டு குறித்து உக்ரைன் இதுவரை எந்த அறிக்கையும் வெளியிடவில்லை.

# திபெத்தில் நிலநடுக்கம்

**பீஜிங், டிச. 23-**

திபெத்தில் ரிக்டர் 3.5 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத் உள்ளது. இமயமலையின் வடக்கு பகுதியில் உயரமான இடத்தில் திபெத் அமைந்துள்ளது.

திபெத்தில் ஜனவரி மாதம் 7ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், திபெத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இரவு 8.29 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.5 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.51 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 87.57 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்புகள் குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

## சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் நானும், த.வெ.க.வும் 100 சதவீதம் உறுதியாக இருப்போம்: விஜய் பேச்சு



சென்னை, டிச. 23-

நானும் த.வெ.க.வும் சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக உள்ளது என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. சார்பில் மாமல்லபுரத்தில் நடைபெறும் சமத்துவ கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

இது ஒரு அன்பான தருணம். அழகான தருணம். அன்பும் கருணையும் தான் அனைத்திருக்கும் அடிப்படை தமிழ்நாடு மண்ணும் தாய் அன்பு கொண்ட மண் தான். தாய்க்கு எல்லா பிள்ளைகளும் ஒன்று தான். வாழ்க்கை முறை, வழிபாட்டு முறை வேறு வேறு என்றாலும் நாம் அனைவரும் சகோதரர்கள். உண்மையான நம்பிக்கை தான் நல்லிணக்கத்தை விதைக்கும். மற்றவர்கள் நம்பிக்கையை மதிக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஒரு இளைஞருக்கு எதிராக உடன் இருந்தவர்களே கிணற்றில் தள்ளிவிட்ட பின்னரும் மீண்டும் வந்து அரசனாகும் கதை பைபிளில் உள்ளது. தன்னை கிணற்றில் தள்ளிவிட்ட உடன் பிறந்த சகோதரர்களை, அந்த நாட்டு மக்களை அந்த அரசன் எப்படி காப்பாற்றினான் என படியுங்கள். எப்படிப்பட்ட எதிரிகளையும் நாம் ஜெயிக்கலாம் என்பதை இதுபோன்ற கதைகள் நமக்கு கற்றுத்தருகிறது.

நானும் த.வெ.க.வும் சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக உள்ளது. ஒளி ஒன்று பிறக்கும் அந்த ஒளி நமக்கு வழிகாட்டும். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள். நம்பிக்கையுடன் காத்திருங்கள், நல்லதே நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## கேரளாவில் தனியார் பள்ளிகள் கிறிஸ்துமஸ் விழாவுக்கு தடை

### முதல்வர் பினராயி விஜயன் எச்சரிக்கை

கேரளா, டிச. 23-

கேரளாவில் சில தனியார் பள்ளிகள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு தடை விதித்தது தொடர்பாக கேரள முதல்வர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கேரளாவில் சில தனியார் பள்ளிகள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு தடை விதித்தது தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ள கேரள முதல்வர் பினராயி விஜயன், பள்ளிகளை வகுப்புவாத ஆய்வகங்களாக மாற்ற அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சாதி, மதம் கடந்து கல்வி கற்கும் இடம் பள்ளி, அங்கு பிரிவினைவாத விதைகளை விதைக்கும் முயற்சியை ஏற்க முடியாது என்று பினராயி விஜயன் தெரிவித்துள்ளார். மேலும், ஜனநாயக உணர்வு மிக்க கேரளாவில் பள்ளிகளை வகுப்புவாத ஆய்வகங்களாக மாற்ற அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, தலைமைச் செயலகத்தில் காவல்துறை பயிற்சி முடித்து தமிழ்நாட்டில் பணிபுரியவுள்ள இந்திய காவல் பணி அலுவலர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழுவுடன் ஆலோசனை நடத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின்

சென்னை, டிச. 23-

தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவின் முதல் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி தலைமையில் நடைபெற்றது. இதையடுத்து தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவுடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கட்சிகள் தீவிரமாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இன்னும் ஒரு சில மாதங்களில் தேர்தல் அறிவிப்பு வெளியாகவுள்ளதையடுத்து தி.மு.க. 2-வது முறையாக ஆட்சியைக் கைப்பற்ற முனைப்பு காட்டி வருகிறது. இதில் தேர்தல் வாக்குறுதிகள் முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தி.மு.க. தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க தி.மு.க. எம்.பியும் கட்சியின் துணை பொதுச் செயலாளருமான கனிமொழி தலைமையில் குழு அமைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தக் குழுவின் முதல் கூட்டம் நேற்று (டிச. 22) காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் டி.ஆர்.பி ராஜா, கோவி செழியன், பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதன்பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின், தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவுடன் ஆலோசனை மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஹெத்தையம்மன் பண்டிகை: நீலகிரிக்கு ஜன. 7 உள்ளூர் விடுமுறை

நீலகிரி, டிச. 23-

நீலகிரி மாவட்டத்திற்கு ஜனவரி 7-ம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் படுக இன மக்களின் குலதெய்வம் ஹெத்தையம்மன் ஆகும். குன்னூர் அருகே உள்ள ஜெகதளாவை தலைமையிடமாக கொண்டு ஜெகதளா, காரக்கொரை, ஒதனட்டி, பேரட்டி, மல்லிக்கொரை, மஞ்சுதளா, சின்ன பிக்கட்டி, பெரிய பிக்கட்டி ஆகிய 8 கிராமங்களை அடக்கிய ஆரூர் சார்பில் ஜனவரி மாதத்தில் ஹெத்தையம்மன் பண்டிகை ஆண்டுதோறும் கோலாகலமாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான ஹெத்தையம்மன் பண்டிகை அடுத்த மாதம் ஜனவரி 7-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. பண்டிகையையொட்டி 8 கிராம பக்தர்கள் விரதம் மேற்கொண்டு பல்வேறு கிராமங்களுக்கு பாதயாத்திரை சென்று வருவார்கள். இந்த நிலையில், ஹெத்தையம்மன் பண்டிகையை யொட்டி (O7.01.2025) புதன்கிழமை அன்று உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவித்துள்ளார். இந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில், சனிக்கிழமை வேலை நாளாக செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடகாவை சேர்ந்தவர்கள் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றால் ரூ. 6 கோடி பரிசு: சித்தராமையா

கர்நாடாக, டிச. 23-

கர்நாடகாவை சேர்ந்தவர்கள் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றால் 6 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார்.

கர்நாடக ஒலிம்பிக் அசோசியேஷன் சார்பில் 'கர்நாடக ஒலிம்பிக் - 2025' விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்ட முதல்வர் சித்தராமையா, விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

அப்போது பேசிய சித்தராமையா, "காங்கிரஸ் அரசு விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. கர்நாடகாவை சேர்ந்தவர்கள் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றால் 6 கோடி ரூபாயும், வெள்ளி பதக்கம் வென்றால் 4 கோடி ரூபாயும், வெண்கல பதக்கம் வென்றால் 3 கோடி ரூபாயும் பரிசாக தரப்படும். இது, விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவு. கர்நாடக விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக்கில் நிச்சயம் பதக்கம் வெல்வர் என நம்புகிறேன்" என்று தெரிவித்தார்.

மேலும், பேசிய அவர், "அரசு வேலைகளில் விளையாட்டு வீரர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு உள்ளது. காவல்துறையில் 2 சதவீதமும் வனத்துறையில் 3 சதவீதமும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, விளையாட்டு துறையில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும்" என்று தெரிவித்தார். 2028 ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உத்தரகாண்ட் அரசுப்பள்ளிகளில் பகவத் கீதை வாசிப்பு கட்டாயம்

உத்தரகாண்ட், டிச. 23-

உத்தரகாண்ட்: அரசுப் பள்ளிகளில் பகவத் கீதை வாசிப்பு கட்டாயம எனறு அரசு உத்தரவிட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் பகவத் கீதையின் வாசகங்களை வாசிப்பதை கட்டாயமாக்கி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. மாணவர்களிடையே இந்திய கலாச்சாரம், தார்மீக விழுமியங்கள், சுய ஒழுக்கம் மற்றும் தலைமைப் பண்புகளை வளர்ப்பதே இந்த முயற்சியின் நோக்கம் என்று முதல்-மந்திரி புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக உத்தரகாண்ட் கல்வி அமைச்சர் தன் சிங் ராவத் கூறுகையில், "சுமார் 17,000 அரசுப் பள்ளிகளின் பாடத்திட்டத்தில் பகவத்கீதை மற்றும் ராமாயணத்தை சேர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். இது செயல்படுத்தப்படும் வரை, பள்ளிகளில் தினசரி பிரார்த்தனைக் கூட்டங்களில் பகவத் கீதை மற்றும் ராமாயணத்தின் வசனங்கள் சேர்க்கப்படும்" என்றார்.

உத்தரகாண்ட் அரசின் இந்த புதிய உத்தரவுபடி, பள்ளிகளில் காலை வழிபாட்டுக் கூட்டத்தின் போது தினமும் ஒரு பகவத் கீதை ஸ்லோகம் வாசிக்கப்பட வேண்டும். ஸ்லோகத்தை வாசிப்பதோடு மட்டுமல்லாமல், அதன் பொருள் மற்றும் அதன் அறிவியல் ரீதியான தொடர்பு குறித்து மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்க வேண்டும். இதுமட்டுமின்றி ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட ஸ்லோகம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அது பள்ளி அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்படும். ஒவ்வொரு வாரத்தின் முடிவிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட வசனம் வகுப்பறைகளில் விவாதிக்கப்படும், மேலும் மாணவர்களின் கருத்துக்கள் சேகரிக்கப்படும். இது மாணவர்களிடம் புரிதலையும், ஈடுபாட்டையும் ஆழப்படுத்த உதவும் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு அம்மாநில கல்வித்துறைகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இலங்கை செல்கிறார்

புதுடெல்லி, டிச. 23-

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இலங்கை பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடியின் சிறப்புத் தூதராக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் செவ்வாய்க்கிழமை (இன்று) இலங்கை செல்ல உள்ளார். இந்த பயணத்தின்போது இலங்கை அரசாங்கத்தின் மூத்த தலைவர்களை ஜெய்சங்கர் சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக 'டித்வா' புயலால் கடுமையான பாதிப்புகளை சந்தித்த இலங்கைக்கு உதவிடம் வகையில், இந்திய அரசு சார்பில் 'ஆபரேஷன் சாகர் பந்து' என்ற திட்டத்தின்கீழ் இலங்கை மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் பல்வேறு தொகுப்புகளாக அனுப்பி வைக்கப்பட்டன. அந்த திட்டத்தின் பின்னணியில் ஜெய்சங்கரின் இந்த பயணம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 28-ம் தேதி 'ஆபரேஷன் சாகர் பந்து' தொடங்கப்பட்டதில் இருந்து, இலங்கைக்கு உலர் உணவுப் பொருட்கள், கூடாரங்கள், தார்ப்பாய்கள், ஆடைகள், நீர் சுத்திகரிப்பு அமைப்புகள், 14.5 டன் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் உட்பட 1,134 டன்களுக்கும் அதிகமான மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

இந்த நிவாரண பொருட்கள் இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல்களான ஐ.என்.எஸ். விக்ராந்த், ஐ.என்.எஸ். உதயகிரி, ஐ.என்.எஸ். சுகன்யா, எல்.சி.யூ.-54, எல்.சி.யூ.-57, எல்.சி.யூ.-51 மற்றும் ஐ.என்.எஸ். காரியல் ஆகியவை மூலம் இந்தியாவில் இருந்து கொழும்பு மற்றும் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்திய தேசிய பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் இலங்கையில் அவசரகால தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அதே நேரம், மஹியங்கனையில் அமைக்கப்பட்ட இந்திய ராணுவத்தின் 85 பேர் கொண்ட மருத்துவ முகாமில் 7,000-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கு தேர்வு அறிவிப்பு: டி.என்.பி.எஸ்.சி. வெளியீடு

சென்னை, டிச. 23-

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு குறித்த அறிவிப்பை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து டி.என். பி. எஸ்.சி. வெளியிட்ட செய்திக்குறிப்பில், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்)-II, 2025. உதவி இயக்குநர் வேளாண்மை (விரிவாக்கம்), முதுநிலை அலுவலர் (நிதி), உள்ளிட்ட 14 பதவிகளுக்கான 76 காலிப்பணியிடங்களை நிரப்ப, ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்)-II -க்கான அறிவிக்கை, நேற்று (22.12.2025) வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வர்கள் 22.12.2025 -20.01.2026 வரை இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். தேர்வர்கள் தேர்வுக்கட்டணத்தை யு.பி.ஐ. மூலமாகவும் செலுத்தலாம். கணினி வழித் தேர்வு 07.03.2026 மற்றும் 08.03.2026 ஆகிய நாட்களில் நடைபெறும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## விஜய்யுடன் உள்ளவர்கள் சந்தர்ப்பவாதிகள்: அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் விமர்சனம்

கிருஷ்ணகிரி, டிச. 13-

விஜய்யுடன் இருப்பவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி கடுமையாக விமர்சித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி பேசியதாவது:-

தி.மு.க. தீய கட்சி, த.வெ.க. தூய்மையான கட்சி என்று விஜய் பேசுகிறார். த.வெ.க. எப்படி தூய்மையான கட்சியாக இருக்க முடியும். அவர்கள் இன்னும் ஆட்சிக்கு வரவில்லை, எப்படி திட்டங்கள் கொண்டு வருவார்கள் என்று தெரியாது. அப்படி திட்டம் கொண்டு வந்தால் அதை ஒழுக்கமாக எவ்வாறு நிறைவேற்றுவார்கள் என்று சொல்ல முடியாது.

விஜய் கட்சி ஆரம்பிக்கும்போது தன்னுடைய ரசிகர்களுடன் ஆரம்பித்தார். அத்துடன் இருந்திருந்தால் ஒரு தனித்தன்மை உள்ள கட்சி என்று கூறி இருக்கலாம். ஆனால் தற்போது பல்வேறு கட்சிகளில் இருந்து உங்களுடன் வந்துள்ளார்கள். அவ்வாறு வந்துள்ளவர்கள் சந்தர்ப்பவாதிகள். எங்கு வசதியான தலைமை பொறுப்பு கிடைக்கும், அடுத்த தேர்தலில் எப்படி நாம் பதவிக்கு வரலாம் என்று நினைப்பவர்கள் தான் விஜய் உடன் சேர்ந்துள்ளார்கள்.

அ.தி.மு.க.வில் உடனடியாக பதவி கிடைக்காது. உழைப்பவருக்கான கட்சி இது. அதனால்தான் கிராமப்புறத்தில் இருந்த சாதாரண எடப்பாடி பழனிசாமி இன்று பொதுச்செயலாளராக உயர்ந்துள்ளார். இங்கு இருப்பவர்கள் எல்லாம் உழைப்பவர்கள். ஆனால் அங்கு சென்று இருப்பவர்கள் சந்தர்ப்பவாதிகள்.

அதுபோல்தான் இங்கிருந்து செங்கோட்டையன் அங்கு சென்றுள்ளார். செங்கோட்டையன் 53 ஆண்டுகள் அ.தி.மு.க.வில் இருந்து எல்லா பதவி சுகத்தையும் அனுபவித்து கொண்டார். புரட்சி தலைவர் எம்.ஜி.ஆருக்கு அடுத்து புரட்சி தளபதி விஜய் என்று சொல்வதற்கு வெட்கமாக இல்லையா? இப்படிப்பட்ட கலவையான மக்கள் தான் அந்த கட்சியில் இருக்கிறார்கள். அது தூய்மை கட்சி இல்லை. கலப்பட கட்சி. ஏன் கலப்பட கட்சி என்றால் இங்கிருந்து செங்கோட்டையன் சென்றுள்ளார். எங்கு வாய்ப்பு கிடைக்கும் என்று சுற்றுகிற கூட்டம் விஜய்யுடன் வந்துள்ளது. விஜய் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாளை உங்களையும் காலி செய்து விட்டு வேறு இடத்திற்கு சென்று விடுவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஆட்சி மாற்றத்திற்காக வரும் சட்டமன்ற தேர்தலில் பிரச்சாரம்: சரத்குமார் பேட்டி

நெல்லை, டிச. 23-

வரும் சட்டமன்ற தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்காக பிரச்சாரம் செய்யபோவதாக நடிகர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக பா.ஜ.க. தேசிய பொதுக்குழு உறுப்பினரும், நடிகருமான சரத்குமார் வருகை தந்தார். அவருக்கு கட்சி நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் சரத்குமார் பேசியதாவது;-

தமிழகத்தில் 90 சதவீதம் மத்திய அரசின் திட்டங்களே செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், மத்திய அரசின் திட்டங்களுக்கு தி.மு.க. தனது பெயரை வைத்துக்கொள்கிறது. மதச்சார்பின்மை குறித்து தி.மு.க. பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் விவகாரத்தில் விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும். தீப தூணில் தீபம் ஏற்றப்பட வேண்டும் என்பது அனைவரின் எண்ணமாக உள்ளது. தீபத் தூண் விவகாரத்தில் அரசு மாறி மாறி பேசிவருகிறது.

தமிழக வெற்றிக் கழகம் என்று முழுமையாக சொன்னால் எனக்கு தெரியவில்லை. த.வெ.க., இ.வெ.க., மு.வெ.க. என்று சொன்னால் தான் தெரிகிறது. அரசியல் கட்சி ஆரம்பித்தால் தேர்தல் பணி தொடங்குவது அவர்களது வேலை. அதனை அவர்கள் தொடங்கியுள்ளனர். விஜயை பிரமாண்டமாக காட்டி அவரது கட்சி பெரிய கட்சியாக மக்கள் மத்தியில் காட்டப்பட்டு வருகிறது. உலகத்தில் மிகப்பெரிய கட்சியாக பா.ஜ.க. உள்ளது. தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க.தான் பெரிய கட்சி. 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் நான் போட்டியிடவில்லை. என்னுடன் இருப்பவர்களை போட்டியிட வைத்து வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிக்கிறேன்.

ஜனவரி மாதம் கூட்டணி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் முழுவதுமாக இறங்கி தேர்தல் பணியாற்ற தயாராகி வருகிறேன். நான் சட்டமன்றத் தேர்தலில் எங்கும் போட்டியிடவில்லை. எனக்கு வாய்ப்பு கொடுத்தாலும் பிறருக்காக, ஆட்சி மாற்றத்துக்காக பிரச்சாரம் செய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

மரம் மனிதனின் உரம்

## தேர்தல் அறக்கட்டளை மூலம் ரூ. 6,654 கோடி நன்கொடை பெற்ற பாரதிய ஜனதா கட்சி

டெல்லி, டிச. 23-

தேர்தல் அறக்கட்டளை மூலம் பா.ஜ.க ரூ.6654 கோடி நன்கொடையாக பெற்று உள்ளது. இதுதொடர்பான அறிக்கை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த 2017-18-ம் ஆண்டில் மத்திய அரசு தேர்தல் நிதி பத்திரங்கள் முறையை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் அதிக நிதி வசூலிக்கும் கட்சியாக பா.ஜ.க திகழ்ந்தது. இந்த தேர்தல் பத்திரங்கள் முறை கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில் தேர்தல் நன்கொடை பத்திரங்கள் திட்டத்தை ரத்து செய்த பிறகு தேர்தல் அறக்கட்டளை மூலம் பா.ஜ.க ரூ.6654 கோடி நன்கொடையாக பெற்று உள்ளது.

அறக்கட்டளைகள், பெரு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மூலம் கடந்த ஏப்ரல் 1-ந்தேதியில் இருந்து இந்த ஆண்டு மார்ச் 30-ந்தேதி வரை ரூ.6654 கோடியை நன்கொடையாக பெற்றுள்ளது. பா.ஜ.காவால் தயாரிக்கப்பட்ட இந்த நிதி அறிக்கை கடந்த 8-ந்தேதி தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது.

ரூ.6654 கோடி நன்கொடை பெற்ற இந்த கால கட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் மற்றும் அருணாசல பிரதேசம், சிக்கிம், ஆந்திரா, ஒடிசா, ஜம்மு-காஷ்மீர், அரியானா, ஜார்க்கண்ட், மராட்டியம், டெல்லி ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது.

கடந்த நிதி ஆண்டில் பா.ஜ.க ரூ.3967 கோடி நன்கொடையாக பெற்றது. தற்போது அந்த கட்சியின் நன்கொடை 68 சதவீதமாக அதிகரித்து உள்ளது.

பஜாஜ் குழுமத்தின் 3 வெவ்வேறு நிறுவனங்கள் இணைந்து ரூ.66 கோடியை அளித்துள்ளது. ஐ.டி.சி. நிறுவனம் ரூ.35 கோடியும், திலீப் பில்கான் குழுமம் ரூ.29 கோடியும், ஹீரோ குழுமம் ரூ.23.65 கோடியும் பங்களித்துள்ளன. தனி நபர்கள் அனைவரும் ரூ.20 ஆயிரத்திற்கும் மேல் நன்கொடை வழங்கி இருக்கிறார்கள். நிறுவனங்கள் காசோலை, வரைவோலை மற்றும் வங்கி பண பரிமாற்றம் வாயிலாக பணத்தை கொடுத்துள்ளன. பல்வேறு பா.ஜ.க தலைவர்களும் நன்கொடையை அளித்துள்ளனர். தெலுங்கு தேசம் கட்சிக்கு ரூ.85.2 கோடியும் (முன்பு ரூ.274 கோடி), பிஜூ ஜனதா தளத்திற்கு ரூ.60 கோடியும் (ரூ.246 கோடி) கிடைத்தன.

காங்கிரஸ் மட்டுமல்ல அதன் ஒட்டு மொத்த கூட்டணியிலும் உள்ள 12 கட்சிகளின் தேர்தல் நிதியே மொத்தம் வெறும் ரூ.1343 கோடி தான். இந்த தொகையுடன் ஒப்பிட்டால் கூட பா.ஜ.க 4.5 மடங்கு அதிக நிதியை வசூலித்து இருக்கிறது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



உலகத்தில் மிகப்பெரிய கட்சியாக பா.ஜ.க. உள்ளது. தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க.தான் பெரிய கட்சி. 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் நான் போட்டியிடவில்லை. என்னுடன் இருப்பவர்களை போட்டியிடவைத்து வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிக்கிறேன்.

- சரத்குமார்



பா.ஜனதா கட்சி யாரையும் கூட்டணிக்கு அழைக்காது. த.வெ.க.வுக்கு தேவைப்பட்டால் கூட்டணியில் இணைந்து கொள்ளலாம். தேர்தலில் எத்தனை முனை போட்டி இருந்தால் தி.மு.க.வை வீழ்த்த முடியும் என்பதை உணர்ந்து விஜய் செயல்பட்டால் நல்லது. எம்.ஜி.ஆரை போல் எல்லோரும் கட்சி ஆரம்பித்து ஆட்சியை பிடித்து விட முடியாது.

- நயினார்



நாட்டில் தற்போது உயர்ந்து கொண்டே செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், மின் கட்டண உயர்வு, வாகன வரி உயர்வு, சுங்கச் சாவடி கட்டண உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஏழையெளிய மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், தற்போது உயர்த்தப்பட்டுள்ள ரயில்வே கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்.

- ஓ.பன்னீர்செல்வம்



த.வெ.க. தூய சக்தியா என்பது வருகிற தேர்தலில் தெரியும். கூட்டணிக்கு வரவேண்டும் என தற்போது எங்களை அணுகி வருகிறார்கள். எங்களது கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என்ன நினைக்கிறார்களோ அதைத்தான் நான் செய்வேன். பிப்ரவரியில் ஜெயலலிதா பிறந்தநாளுக்கு பிறகு எங்களது கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்.

- டி.டி.வி.தினகரன்


சென்னை அடையாறு மண்டலம் 172வது வார்டு குருநானக்கல்லூரி அருகில் வேளச்சேரி மயான பூமியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயான பூமி கட்டுமான பணியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். இதில் மண்டல வலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் ரூ.86.40 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவு நேர காப்பகம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை,டிச.23**

துணை முதலமைச்சர்.உதயநிதி ஸ்டாலின் (22.12.2025) சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 86.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவுநேர காப்பகத்தினை திறந்து வைத்து, காப்பகத்தில் தங்கிடும் 86 நபர்களுக்கு பாய், தலையணை, படுக்கைவிரிப்பு உள்ளிட்ட நல உதவி தொகுப்புகளை வழங்கினார்.

பின்னர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

சென்னை மெரினா கடற்கரையில் தங்கி, கைவினைப் பொருட்கள், பலூன்கள், அழகு சாதன பொருட்கள், பூக்கள் எல்லாம் விற்று வந்த 86 ஆதரவற்றோர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர மாநகராட்சியின் சார்பாக, இங்கே கடற்கரை பகுதியில் அவர்கள் தங்கியிருப்பதற்காக 2,500 சதுர அடியில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடற்றோர் இரவு நேர காப்பகத்தை இன்று நானும் நம்முடைய அமைச்சர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர், மேயர், துணை மேயர் எல்லோரும் வந்து இன்றைக்கு திறந்து வைத்திருக்கின்றோம்.

இரவு நேரங்களிலும், மழை நேரங்களிலும், வெயிலிலும் அவர்களுக்கு தங்குவதற்கு இடமில்லாமல் இருந்த சூழலில் அவர்களுக்கெல்லாம் இந்த வசதி ஒரு பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கட்டளையிட்டுள்ளார்கள்.

இந்த காப்பகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி கழிப்பிடங்கள், குளியலறைகள், அவர்கள் பொருட்களை எல்லாம் சேமித்து வைப்பதற்கு அலமாரிகள், குடிநீர் வசதி, மின் வசதி இப்படி அனைத்து விதமான அடிப்படை வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு இன்றைக்கு மாநகராட்சியின் சார்பாக பாய், போர்வை, தலையணை உள்ளிட்ட 15 அத்தியாவசிய பொருட்களும் தரப்பட்டிருக்கிறது. இதே மாதிரி மெரினாவில் தங்கியிருக்கக்கூடிய மற்றவர்களுக்கும் இதுபோன்ற வசதியை விரிவுபடுத்துவதற்கான அந்த ஆலோசனைகளிலும் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். ஏற்கனவே மாநகராட்சியின் சார்பாக வீடற்றோர்களுக்கு ஒரு 45 இடங்களில் இதுபோன்று வசதிகள் இருக்கின்றது. இது கூடுதலாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஆய்வு செய்து இங்கு பக்கத்திலேயே சொன்னதுபோல இன்னும் அதிகமான பேர் தங்குவதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனைகளையும் செய்து கொண்டிருக்கிறோம். ஆரம்பத்தில் இருந்தே SIR திட்டத்திற்கு நாங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். இந்த கால அவகாசம் போதாது என்று சொல்லியிருக்கிறோம். முக்கியமாக பீகாரில் SIR அறிவித்து யாருடைய வாக்குகள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், கழகத் தலைவர் அவர்கள்தான் சொன்னார். எதிர்பார்த்ததைவிட அதிகமான வாக்குகளை நீக்கியிருக்கின்றார்கள். 97 இலட்சம் நீக்கியிருக்கின்றார்கள். சென்னையில் மட்டும் 14 இலட்சம் வாக்குகள் நீக்கப்பட்டிருக்கிறது. நேற்று மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது, எங்களுடைய தலைவர் அவர்கள், தெளிவாக அத்தனைபேருக்கும் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள். நீக்கப்பட்ட வாக்குகள், விடுபட்டுபோனவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் இவர்களையெல்லாம் எப்படி சேர்ப்பது என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். பொதுமக்கள் சென்று அவர்கள் வாக்குகள் எல்லாம் இருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய நம்முடைய BLA2 அவர்களை தொடர்பு கொண்டால், நிச்சயம் அதையெல்லாம் சேர்ப்பதற்கு, ஜனவரி 18 வரை நேரம் உள்ளது மீண்டும் சேர்ப்பதற்கு, எனவே அந்த பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நாங்கள் வலியுறுத்துவோம்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர். மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர்.எஸ். மதன்மோகன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டனர்.



# திருவொற்றியூரில் ஐயப்பசாமிக்கு மலர் பூஜை

**திருவொற்றியூர் டிச.23**

திருவொற்றியூர் தேரடி ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் குழுவின் சார்பில் தெற்கு மாட வீதியில் உள்ள காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் புரத்தில் ஐயப்பன் மலர் பூஜை வெகு விமர்சியாக நடைபெற்றது.

இந்த மலர்பூஜையில் மகா கணபதி பூஜை ஐயப்பனுக்கு நெய் அபிஷேகம் புஷ்ப அலங்காரத்துடன் தீப தூப ஆராதனை நடைபெற்றது. இந்தநிகழ்வில் செண்டைமேளம் பக்திஇசைநடைபெற்றது. முடிவில் அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. முன்னதாக ஒரு சிறுமியின் பரதநாட்டிய நிகழ்ச்சி விழாவிற்கு வருகை தந்தவர்களையும் ஐயப்ப பக்தர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இதற்கான ஏற்பாடுகளை குரு சாமிகள் தீபம் எஸ்.சங்கர் ஏ.குப்புசாமி என். ரமேஷ் உட்பட பலர் ஐயப்ப பக்தர்கள் செய்திருந்தனர்.




சென்னையில்ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொதுஅரங்கினை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், துணை ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டனர்.


திருவொற்றியூர் சுகம் மருத்துவமனை இயக்குனர்கள் டாக்டர் டி.பி.டி.சத்தியகுமார் -டாக்டர்ஷீலா சத்தியகுமார் இளைய சகோதரர் பி.சாம்பிரசாத் பொன்மணி பிரசாத் மகன் அபிஷேக்ராஜேந்திரசிங் -அனீஸ் ரெபக்கா ஆகியோரின் திருமண வரவேற்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்தினார். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியம் மற்றும் ஈகிள் பிரஸ் குழும உறவினர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

# என்யுசிஎப்டிசி மற்றும் ஐஐஎம்ஏ வெஞ்சர்ஸ் இணைந்து பாரத் கூபத்தான் 2025-ஐ தொடங்கின

**சென்னை,டிச.23**

அர்பன் கோஆபரேடிவ் பேங்க்கின் (அம்ப்ரெல்லா அமைப்பாக செயல்படும்,நேஷனல் அர்பன் கோஆபரேடிவ்பைனான்ஸ்தேவேலோப்மேன்ட் கார்பொரேஷன் ஐஐஎம்ஏ வெஞ்சர்ஸுடன் இணைந்து பாரத் கூபத்தான் 2025-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.இந்த தேர்வு அடிப்படையிலான திட்டம், அர்பன் கோஆபரேடிவ் பேங்க்களை இணைகுமான, விரிவாக்கக்கூடிய மற்றும் உள்நாட்டு டிஜிட்டல் சொலியுசன் நடைமுறைப்படுத்துவதற்காக உயர்திறன் டெக்னோலோஜி இன்னோவேட்டர்ஸ்களை யுசிபிகளுடன் இணைக்கிறது. ஸ்டார்ட்அப்ஸ், பின்டெக் கம்பெனீஸ், டெக்னாலஜிஸ்ட், ப்ராடக்ட் டீம்ஸ் மற்றும் டேட்டா இன்னோவேட்டர்ஸ் ஆகிய அனைவரையும் யுசிபி சூழலுக்காக உருவாக்கப்பட்ட தீர்வுகளை சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.இந்த முயற்சி பைனான்சியல் இன்கிளுஷன் ஆழப்படுத்தவும், கவர்ணன்ஸ் ஸ்டாண்டர்ட்ஸ் வலுப்படுத்தவும், நகர்ப்புற கூட்டு வங்கி துறையின் நீண்டகால உறுதித் திறனை மேம்படுத்தவும் நோக்கமிட்டுள்ளது. குறிப்பாக சைபர் செக்யூரிட்டி பிரேம்வொர்க்ஸ் களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது; அதில் டேட்டா சோவ்ரன்டி, கஸ்டமர் ப்ரோடேக்டியன் மற்றும் ரெகுலர் கம்பிளியன்ஸ்கான கவனம் அடங்கும். இத்திட்டம் துறைக்கேற்ப தரநிலைகளையும், புதுமையாளர்கள் மற்றும் வங்கிகளுக்கு இடையிலான நீடித்த கூட்டாண்மைகளையும் ஊக்குவிக்கிறது.இந்த முயற்சி குறித்து NUCFDC- யின், சி.இ.ஒ, திரு. பிரபாத் சத்துர்வேதி கூறியதாவது: நகர்ப்புற கூட்டு வங்கிகள், இந்தியாவின் பைனான்சியல் இன்கிளுஷன் இலக்கில் முக்கிய பங்கை வகிக்கின்றன மற்றும் சமூக அடிப்படையிலான நிதியின் இதயத்தில் நீண்டகாலமாக உள்ளன. பெரியயுசிபிகள் டிஜிட்டல் துறையில் முன்னேற்றம் கண்டுள்ளபோதும், பல சிறிய மற்றும் நடுத்தர வங்கிகள் இன்னும் குறைந்த தொழில்நுட்ப அடைக்கலத்துடனேயே செயல்படுகின்றன. பாரத் கூபத்தான் 2025, தேவைக்கேற்ப தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதன் மூலம் டிஜிட்டல் நவீனமயத்தை விரைவாகவும் பயனுள்ளதாகவும் செயல்படுத்த உதவுகிறதுஐஐஎம்ஏ வெஞ்சர்ஸின் சி.இ.ஒ, - மேனேஜிங் பார்ட்னர் பிரியங்கா சோப்ரா கூறுகையில்: "நகர்ப்புற கூட்டு வங்கிகள் மாற்றத்திற்கான சிறந்த நிலையில் உள்ளன; பாரத் கூபத்தான் 2025 அவற்றுக்கு நவீன மற்றும் விரிவாக்கக்கூடிய தொழில்நுட்பங்களை ஏற்க ஒரு கட்டமைப்புடன் கூடிய பாதையை வழங்குகிறது. புதுமையாளர்கள் தங்களது தீர்வுகளை நடைமுறையில் அமல்படுத்தக்கூடிய வடிவில் காட்டவும், குறிப்பாக இந்தியாவின் குறைந்த வருமான மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் UCBகளுடன் இணைந்து செயல்படவும் இது ஒரு முக்கிய தளமாக உள்ளது


சென்னை மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் இந்திய நாட்டிய விழாவினை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், இரா.ராஜேந்திரன் துவக்கி வைத்தனர். இதில் செல்வம் எம்பி, சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குனர் கிறிஸ்துராஜ், சார் ஆட்சியர் மாலதி ஹெலன், தாம்பரம் துணை மேயர் காமராஜ், மாமல்லபுரம் நகர்மன்ற தலைவர் வளர்மதி கலந்து கொண்டனர்.

# திருவல்லிக்கேணி பகுதியில் கோயில் உண்டியலை உடைத்து பணம் திருடியவர் கைது

**சென்னை டிச 23-**

சென்னை, திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், சி.என்.கே ரோட்டில் வசித்து வரும் பார்த்திபன், என்பவர் திருவல்லிக்கேணி, முகமது அப்துல் 1வது தெருவில் உள்ள ஶ்ரீ சிட்டி கணபதி கோயிலை தினமும் பூஜை செய்து பராமரித்து வருகிறார். பார்த்திபன் வழக்கம் போல் கோயிலுக்கு சென்று பார்த்த போது, கோயிலின் பூட்டு மற்றும் உண்டியலை உடைத்து பணத்தை யாரோ திருடிச்சென்றது தெரியவந்தது.

இது குறித்து பார்த்திபன் திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி உண்டியல் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட மகேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.500ஐ மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி மகேஷ் மீது ஏற்கனவே 7 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி மகேஷ் சிறையில் அடைக்கப்பட்டார்.

# மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வாங்கி விற்றவர் கைது

**சென்னை டிச 23-**

சென்னையில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் நந்தம்பாக்கம் காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து இராமாபுரம், சத்தியா நகர் சந்திப்பு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த இருவர் விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், நந்தம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த எதிரி 1.பிரபு, 2.டைடஸ் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 2 செல்போன்கள் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரிகள் சமூக வலைதளம் மூலம் மெத்தம்பெட்டமைன் வாங்கி விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர். இந்நிலையில் தனிப்படை காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளி சூர்யபிரகாஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் மற்றும் 1 ஆட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் சூர்யபிரகாஷ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# காஞ்சிபுரத்தில் 60 பயனாளிகளுக்கு புதிய ரேஷன் கார்டுகள்: மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்

**காஞ்சிபுரம், டிச. 23 -**

காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கலெக்டர் கலைச்செல்வி 60 பயனாளிகளுக்கு புதிய புதியமின்னணு ரேஷன் கார்டுகளை வழங்கினார். பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடம் மனுக்களை பெற்று, குறைகளை கேட்டறிந்தார்.காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் கலைச்செல்வி தலைமையில் நடந்தது.

**நடவடிக்கை**

இக்கூட்டத்தில் பொது மக்களிடம் இருந்து 405 மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இன்று நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் 60 பயனாளிகளுக்கு புதிய மின்னணு ரேஷன் கார்டுகளை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார், பொது மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடம் மனுக்களை பெற்று, குறைகளை கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முருகேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ( பொது ) ரவிச்சந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் விஜயகுமார், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# விருகம்பாக்கத்தில் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

**சென்னை டிச 23-**

சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் சார்பில் விருகம்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பில் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில், மத்திய குற்றப்பிரிவு சைபர்கிரைம் துணை ஆணையர் டாக்டர் என்.ஶ்ரீநாதா, மேற்பார்வையில் மத்திய குற்றப்பிரிவு, சைபர் கிரைம் காவல் நிலையம் சார்பில் விருகம்பாக்கம், ஆற்காடு சாலையில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் பொதுமக்களுக்கு சைபர் கிரைம் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் உஷா ராணி கலந்து கொண்டு டிஜிட்டல் கைது, ஆன்லைன் டிரேடிங் மோசடி, ஆன்லைன் முதலீடு மோசடி, மேட்ரிமோனியல் மோசடி, கிப்ட் மோசடி மற்றும் இதர ஆன்லைன் மோசடிகள் குறித்து தெளிவாக எடுத்து கூறியும், அதிலிருந்து பாதுகாத்து கொள்ளும் கண்ணியமான, பாதுகாப்பான டிஜிட்டல் பழக்கவழக்கங்களை மேம்படுத்தவும் நடைமுறை ஆலோசனைகள் வழங்கி பொதுமக்களுடன் கலந்துரையாடினார். மேலும் முக்கிய சைபர் பாதுகாப்பு நடைமுறைகளை எடுத்துரைக்கும் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இதில் குடியிருப்பு நலச்சங்க நிர்வாகிகள் உட்பட சுமார் 40க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஒரு ஆரோக்கியமான உரையாடலை ஏற்படுத்தியும், சைபர் குற்றத்தினால் பாதிப்படையாமல் இருக்க அணுக வேண்டிய நடைமுறைகள், தரவுகளை சரிபார்த்து, உரிய விழிப்புணர்வு கையாளுதலுடன் பொது மக்கள் ஆன்லைனில் விழிப்புடன் இருக்க ஊக்குவித்தது.

சென்னை பெருநகர காவல் சார்பாக பொதுமக்கள் ஆன்லைன் தளங்களில் பணம் செலுத்துவதற்கு முன் சரிபார்க்க வேண்டும் என்றும், ஆர்வத்தை தூண்டி உண்மையற்ற வருமானத்தை வழங்கும் மோசடிகளுக்கு எதிராக எச்சரிக்கையுடன் கவனம் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் சைபர் மோசடிகள் குறித்து 1930 என்ற எண்ணிலோ, www.cybercrime.gov.in என்ற இணையதளம் மூலமாகவோ அல்லது அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்திலோ புகார் அளிக்கலாம் எனவும்அறிவுறுத்தப்பட்டது.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

## சேலம் மாவட்டம் ஓமலூரில் நடந்த நிர்வாகிகள் கூட்டம்

# விடுபட்ட வாக்காளர்களை நிர்வாகிகள் தொண்டர்கள் சேர்க்க வேண்டும்: எடப்பாடி பழனிச்சாமி அறிவுறுத்தல்



**ஓமலூர்,டிச.23-**

சேலம் மாவட்டம் ஓமலூர் அதிமுக அலுவலகத்தில் சேலம் புறநகர் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி கலந்து கொண்டு பேசினார். அப்போது வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்டு உள்ளவர்களை கண்டறிந்து சரியான முறையில் நீக்கப்பட்டு உள்ளனரா என பார்க்க வேண்டும்.

உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருந்தால் அவர்களது பெயரை பட்டியலில் மீண்டும் சேர்க்க நிர்வாகிகள், தொண்டர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் பணியில் சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் அதிமுக அமைப்பு செயலாளர்கள் செம்மலை, சந்திரசேகரன், சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன் மற்றும் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டும் பொறி பயன்பாடு குறித்து காட்சி



**கிருஷ்ணகிரி,டிச.23-**

பொம்மரசனப்பள்ளி கிராமத்தில் காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சி கட்டுப்பாட்டிற்கான ஒட்டும் பொறிகளை காட்சிப்படுத்திய கல்லூரி மாணவர்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி பகுதிக்கு உட்பட்ட பொம்மரசனப்பள்ளி கிராமத்தில் அதியமான் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் மேற்கொண்ட ஊரக வேளாண்மை பயிற்சி அனுபவம் திட்டத்தின் ஒரு பகுதியாக, காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒட்டும் பொறி பயன்பாடு குறித்து காட்சிப்படுத்தல் நடத்தப்பட்டது. இதில் மோகன் ஆ, முரளி பூ, நிதியரசன் பிரவீன், பிரவிந்த், ராகுல், ராஜராஜசோழன், ஸ்ரீஜு மோன் வி, சதீஷ்குமார் வை மற்றும் வசந்த்மா ஆகிய மாணவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விளக்கங்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் காய்கறி பயிர்களை பாதிக்கும் த்ரிப்ஸ், வெள்ளை ஈ, அஃபிட் போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை ஆரம்ப நிலையிலேயே கண்காணித்து கட்டுப்படுத்த ஒட்டும் பொறிகள் எவ்வாறு உதவுகின்றன என்பது விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மஞ்சள் ஒட்டும் பொறி வெள்ளை ஈ மற்றும் அபிட் பூச்சிகளை ஈர்க்கும் என்றும், நீல ஒட்டும் பொறி த்ரிப்ஸ் பூச்சிகளை ஈர்க்கும் என்றும் விளக்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு தேவையான ஒட்டும் பொறி எண்ணிக்கை, பயிர் உயரத்துக்கு ஏற்ப பொறிகளை பொருத்தும் முறை, பொறி மாற்ற வேண்டிய கால இடைவெளி போன்ற நடைமுறை விபரங்களும் கூறப்பட்டன. ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் குறைந்த செலவில் பூச்சி மேலாண்மை செய்ய ஒட்டும் பொறிகள் சிறந்த தொழில்நுட்பமாகும் என வலியுறுத்தப்பட்டது. மேலும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நடைமுறைகள் செய்முறை விளக்கத்துடன் காண்பிக்கப்பட்டன.

இந்த காட்சிப்படுத்தலை பார்த்த விவசாயிகள், தங்களின் காய்கறி சாகுபடியில் ஒட்டும் பொறிகளை பயன்படுத்த முன்வந்தனர். இந்நிகழ்ச்சி ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நடைமுறைகளை கிராம அளவில் பரப்புவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

# சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,டிச.23-**

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் *(22.12.2025)* நடைபெற்றது. பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத்தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட *9* மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

முன்னதாக, சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், அருநூத்துமலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி *11*-ஆம் வகுப்பு மாணவர்கள் பி.கனகராஜ், எம்.ரா ஜேஸ் கண்ணன் ஆகிய இருவரும் மேல் மூத்தோர் பிரிவுக்கும், *9*-ஆம் வகுப்பு மாணவர் சி.மோர்த்தீஸ் இளையோர் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதையொட்டி, மேல் மூத்தோர் பிரிவுகளுக்கான தேசிய அளவிலான ரக்பி போட்டிகள் ஜனவரி முதல் வாரத்தில் டெல்லியிலும், இளையோருக்கான போட்டிகள் ஜனவரி திங்கள் 3-வது வாரத்திலும் ஒடிசா மாநிலத்திலும் நடைபெற உள்ளது. தேசிய அளவிலான ரக்பி போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் மூன்று பேரை நேரில் அழைத்து கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, வாழ்த்துகள் தெரிவித்து பரிசுகள் வழங்கினார்.

இக் கூட் டத் தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சின்னுசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஜெயக்குமார், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) ஜானகி, திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) சுகந்தி பரிமளம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



நாமக்கல் மாவட்டம், என்.புதுப்பட்டியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் தின கொண்டாட்ட விழாவில் ஸ்ரீதேவி மோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பரிசு பொருள்களை வழங்கினார்



**நாமக்கல் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் முரளி பாலுசாமி வருகிற சட்டமன்றத் தேர்தலில் நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்ப மனுவை அதிமுக தலைமை அலுவலகத்தில் வழங்கினார். தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.**

# கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது

**கிருஷ்ணகிரி,டிச.23-**

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்;க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் தலைமையில் *(22.12.2025)* நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் தெரிவித்ததாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் *(22.12.2025)* நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்;பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து



*560* மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்;கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் தெரிவித்தார். இக்கூட்டத்தில், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சிவக்குமார், துணை கலெக்டர் (பயிற்சி) செல்வி.சௌமியா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்

## கலெக்டர் துர்காமூர்த்தி தலைமையில் நடைபெற்றது



**நாமக்கல்,டிச.23-**

நாமக்கல் மாவட்டத்தில் ஜல் சக்தி அபியான் *JSA-CTR 2025* திட்டம் தொடர்பாக மத்திய கண்காணிப்பு அலுவலர் கே.வி.அஜித் மற்றும் மத்திய தொழில் நுட்ப அலுவலர் கே.பரமசிவம் விஞ்ஞானி, நிலத்தடி நீர் வாரியம், சென்னை ஆகியோர் நாமக்கல் மாவட்டத்தில் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் பருவ மழைக்கு பிந்தைய காலத்தில் நீர் மேலாண்மை முன்னேற்றம் குறித்து சுற்று பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்.


அதனைத் தொடர்ந்து, நீர் மேலாண்மை தொடர்பான பிற துறை அலுவலர்களுக்கு இன்றைய தினம் கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வனத்துறை, ஊரக வளர்ச்சி துறை, வேளாண்மை துறை, நீர்வளத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, கல்வி துறை, கால்நடை பராமரிப்பு துறை சார்ந்த உயர் அலுவலர்கள், மாநகராட்சி/நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்களது துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள மற்றும் செயல்படுத்தப்படும் நீர் மேலாண்மை தொடர்பான பணிகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து, மத்திய கண்காணிப்பு அலுவலர் கே.வி.அஜித் மற்றும் மத்திய தொழில் நுட்ப அலுவலர் கே.பரமசிவம் (விஞ்ஞானி, நிலத்தடி நீர் வாரியம், சென்னை) ஆகியோர் பரமத்தி வட்டாரம் கோலாரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு உட்பட மாநகராட்சி, நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## ஊத்தங்கரை தனியார் பள்ளியில் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி



**கிருஷ்ணகிரி,டிச.23-**

ஊத்தங்கரை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பள்ளியின் தாளாளர் சக்திவேல் தலைமையேற்று நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்.

பள்ளியின் முதல்வர் கோவிந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார், சிறப்பு அழைப்பாளராக வருகைத்தந்த கல்வி வழிகாட்டல் நிபுணர், கல்வியாளர் அஸ்வின் ராமசாமி ஆகியோர் கலந்துக்கொண்டு மாணவர்களுக்கு நல்ல பல புதுமையான, இன்றைக்குத் தேவையான நல்ல பல தகவல்களையும், பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள பல்வேறு வகையான பாடப்பிரிவுகளில் எவ்வாறு பயில்வது, அந்த பாடப்பிரிவுகளில் சேர்வதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது மற்றும் அந்த பாடப்பிரிவிகளில் பயின்றால் என்ன வேலை கிடைக்கும் என்பதை பற்றி மிகத் தெளிவாகவும், மாணவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் விளக்கி நல்ல தொரு வழிகாட்டல்களையும் வழங்கி, மாணவர்களின் சந்தேகங்களுக்கும் பதிலளித்தார். இறுதியாக மேல்நிலைப் பிரிவின் பொறுப்பாளர் மணிவண்ணன், மற்றும் நிர்வாக முதல்வர் மணிகண்டன் ஆகியோர் நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது.

# நாமக்கல் மாவட்ட ஜங்கம் சமூக நலச் சங்க துவக்க விழா

**ராசிபுரம்,டிச.23-**

நாமக்கல் ஜங்கம் புதிய கிளை திறப்பு மற்றும் புதிய நிர்வாகிகள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பதவியேற்பு விழா நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நாமக்கல் மாவட்ட தலைவராக லயன் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, செயலாளராக டி.எஸ்.இளங்கோ, பொருளாளராக எம்.கே.ரமேஷ், மாணவர் அணி தலைவராக எஸ்.கார்த்திகேயன், மகளிர் அணி தலைவராக எஸ்.நித்யா, மருத்துவ அணி தலைவராக டாக்டர் மோகன், கல்வி அணி தலைவராக ஞானசேகர், வர்த்தக அணி தலைவர் ஜி.சிவகுமார் மற்றும் நிர்வாகிகள் பதவியேற்று கொண்டனர்.

ஜங்கம சங்கம் சமூக நலச் தலைவர் லவ் ஓ நாகராஜ் தலைமையில் நாமக்கல் மாவட்ட தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார், பின்னர் அனைவரும் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர். புதிய நிர்வாகிகளை புலவர் இராமன், நாமக்கல் சிவஞானம், கார்த்திக்கேயன், கோபால், விஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தொடர்ந்து நடந்த கூட்டத்தில், சங்கத்தின் கல்வி அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் அரசு பள்ளி மாணவர்கள் மற்றும் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியை அட்வகேட் எஸ்.சிவனேசன் தொகுத்து வழங்கினார். சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் இருந்து ஜங்கம் சமூகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter, I, Manigandan R S, S/o Rajamanickam, aged 29 years permanently residing at 1/47, Bajanai Kovil Street, Thirukovilur Taluka, Keelathalanur, Post: Keelathalanur, District: Kallakurichi, Tamil Nadu - 605766, intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Building, High Court Campus, Chennai – 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

MANIGANDAN R S

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter, I, R. VIGNESH, S/o Rajamanickam, aged 24 years permanently residing at 1/47, Bajanai Kovil Street, Thirukovilur Taluka, Keelathalanur, Post: Keelathalanur, District: Kallakurichi, Tamil Nadu - 605766, intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai – 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

R. VIGNESH

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:9392/2025,
நாள்:15.12.2025.
மோகன், த.பெ. நஞ்சுண்டன்,
க.எண்:103/1, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தாத்தா முருகபூசாரி என்பவர் கடந்த 09.10.1967-ம் தேதியில் மைலம்பட்டி கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது தாத்தாவின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தாத்தாவின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவுகுறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
மோகன், த.பெ. நஞ்சுண்டன்,
க.எண்:103/1, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவல கம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:9395/2025,
நாள்:15.12.2025.
குமரேசன், த.பெ. கணேசன்,
க.எண்:104, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது பாட்டி பாஞ்சாலி க.பெ. சண்முகம் என்பவர் கடந்த 22.08.1968-ம் தேதியில் மைலம்பட்டி கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது பாட்டியின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது பாட்டியின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவுகுறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
குமரேசன், த.பெ. கணேசன்,
க.எண்:104, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:8656/2025,
நாள்:14.11.2025.
சுரேஷ், த.பெ. சின்னபிட்டன்(எ) முனியநாயக்கர்,
பப்பரிகானூர் கிராமம், சாலமரத்துப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
ஊத்தங்கரை,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தந்தை லேட். சின்னபிட்டன் (எ) முனியநாயக்கர், த.பெ. லேட்.குட்லாட நாயக்கன் என்பவர் கடந்த 20.11.2008-ம் தேதியில் மைலம்பட்டி கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது தந்தையின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தந்தையின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
சுரேஷ், த.பெ. சின்னபிட்டன்(எ) முனியநாயக்கர்,
பப்பரிகானூர் கிராமம்,
சாலமரத்துப்பட்டி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர்அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:9393/2025,
நாள்:15.12.2025.
மோகன், த.பெ. நஞ்சுண்டன்,
க.எண்:103/1, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது பாட்டி குள்ளம்மாள் க.பெ. முருகபூசாரி என்பவர் கடந்த 20.02.1988-ம் தேதியில் மைலம்பட்டி கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது பாட்டியின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது பாட்டியின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
மோகன், த.பெ. நஞ்சுண்டன்,
க.எண்:103/1, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:9394/2025,
நாள்:15.12.2025.
குமரேசன், த.பெ. கணேசன்,
க.எண்:104, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தாத்தா சண்முகம் த.பெ. குள்ளப்ப பூசாரி என்பவர் கடந்த 18.12.1950-ம் தேதியில் மைலம்பட்டி கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது தாத்தாவின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தாத்தாவின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
குமரேசன், த.பெ. கணேசன்,
க.எண்:104, மைலம்பட்டி கிராமம்,
புளியம்பட்டி அஞ்சல்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:9396/2025,
நாள்: 15.12.2025.
சின்னசாமி, த.பெ. சிவலிங்கம்,
க.எண்:2/23, மேட்டுப்புலியூர் கிராமம்,
ஜிங்கல்கதிரம்பட்டி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு
மனுதாரராகிய நான் எனது தாயார் வேடியம்மாள் க.பெ. சிவலிங்கம் என்பவர் கடந்த 21.09.1979-ம் தேதியில் மேட்டுப்புலியூர் கிராமத்தில் அவரது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது தாயாரின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தாயாரின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர்உத்திரவுப்படி//
மனுதாரர்
சின்னசாமி, த.பெ. சிவலிங்கம்,
க.எண்:2/23, மேட்டுப்புலியூர் கிராமம்,
ஜிங்கல்கதிரம்பட்டி அஞ்சல்,

thinaboomi.com
தினபூமி,
டிசம்பர் 23, 2025

### கிரிக்கெட்டையே விட நினைத்தேன்:
# 2023 உலகக்கோப்பை தோல்வி குறித்து மனம் திறந்தார் ரோகித்



**மும்பை, டிச. 23-**

ஐ.சி.சி. ஒருநாள் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு ஓய்வு பெற்றுவிடலாம் என நினைத்ததாக இந்திய அணியின் முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார். மேலும் தோல்வியை எப்படி கையாள வேண்டும் என்பதற்கு 2023 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஏற்பட்ட தோல்வி எனக்கு மிகப் பெரிய பாடமாக அமைந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**இறுதிப்போட்டியில்...**

கடந்த 2023-ம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி. சி. ஒருநாள் உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி அசைக்க முடியாத அணியாக இருந்தது. தோல்வியையே சந்திக்காமல் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பதிவு செய்த இந்திய அணி, இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இதனால், இந்திய அணியின் உலகக் கோப்பை கனவு தகர்ந்தது.

**மிகுந்த கவலையாக...**

இந்த நிலையில், ஐ.சி.சி. ஒருநாள் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு ஓய்வு பெற்றுவிடலாம் என நினைத்ததாக இந்திய அணியின் முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மாஸ்டர்ஸ் யூனியன் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: கடந்த 2023-ம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு மிகுந்த கவலையாக இருந்தது. இனிமேல் கிரிக்கெட்டே விளையாட வேண்டாம் என நினைத்தேன். ஏனெனில், அந்த உலகக் கோப்பைத் தொடருக்காக என்னால் முடிந்த அனைத்தையும் கொடுத்து விட்டேன். என்னிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாததைப் போன்று உணர்ந்தேன்.

**இழந்த ஆற்றலை...**

அந்த உணர்விலிருந்து வெளிவர எனக்கு சிறிது காலம் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் எனக்கு மிகவும் பிடித்த, நேசிக்கும் கிரிக்கெட்டினை அவ்வளவு எளிதாக விட்டுவிட மாட்டேன் என அடிக்கடி கூறிக் கொண்டேன். மெதுவாக இழந்த ஆற்றலை மீண்டும் பெற்று கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேன்.

**மிகுந்த ஏமாற்றத்தில்...**

உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்வியால் அணியில் உள்ள அனைவரும் மிகுந்த ஏமாற்றத்தில் இருந்தோம். இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்வியை என்னால் நம்பவே முடியவில்லை. தனிப்பட்ட முறையில் அந்த தோல்வியிலிருந்து வெளிவருவது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில், ஒருநாள் உலகக் கோப்பைத் தொடருக்காக என்னால் முடிந்த அனைத்தையும் கொடுத்தேன். உலகக் கோப்பை தொடருக்கு 2-3 மாதங்களுக்கு முன்பாக தயாராக ஆரம்பிக்கவில்லை. கடந்த 2022 ஆம் ஆண்டு கேப்டன் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து இந்த உலகக் கோப்பைத் தொடருக்காக தயாரானேன்.

**ஓரிரு மாதங்கள்...**

உலகக் கோப்பையை வெல்வதே என்னுடைய இலக்காக இருந்தது. அது டி20 உலகக் கோப்பையாக இருந்தாலும் சரி, ஒருநாள் உலகக் கோப்பையாக இருந்தாலும் சரி. அதனால், ஒருநாள் உலகக் கோப்பைத் தொடரின் இறுதிப்போட்டியில் தோல்வியடைந்தது என்னை முற்றிலுமாக சோகத்தில் ஆழ்த்தியது. என்னுடைய உடலில் கொஞ்சம்கூட ஆற்றல் இல்லாததாக உணர்ந்தேன். அந்த தோல்வியிலிருந்து வெளிவர எனக்கு ஓரிரு மாதங்கள் தேவைப்பட்டன.

**எப்படி கையாள...**

ஒரு விஷயத்தில் அதிகமாக முதலீடு செய்து, அதற்கான பலன் கிடைக்கவில்லை யென்றால், மிகுந்த ஏமாற்றமடைவது இயல்பானது. மிகச் சரியாக கூறவேண்டுமென்றால், நானும் அந்த மனநிலையில்தான் இருந்தேன். ஆனால், வாழ்க்கை இத்துடன் முடிந்துவிடாது என எனக்குத் தெரியும். தோல்வியை எப்படி கையாள வேண்டும் என்பதற்கு 2023 உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்வி எனக்கு மிகப் பெரிய பாடமாக அமைந்தது. மீண்டும் புத்துணர்ச்சியுடன் முதலில் இருந்து ஆரம்பித்தேன். 2024 ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பைத் தொடரில் என்னுடைய முழு கவனத்தையும் செலுத்தினேன். இப்போது இதனைக் கூறுவதற்கு மிகவும் எளிதாக இருக்கிறது. ஆனால், அந்த நேரத்தில் அது மிகவும் கடினமாக இருந்தது என்றார். கடந்த ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பைத் தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது குறிப்பிடத்தக்கது.

# வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து



**மவுண்ட் மாங்கானு, டிச. 23-**

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி நியூசிலாந்து அணி தொடரை கைப்பற்றியது.

**575 ரன் குவிப்பு....**

நியூசிலாந்து-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையேயான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மவுண்ட் மாங்கானுவில் நடைபெற்றது. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 575 ரன் குவித்து டிக்ளேர் செய்தது. தொடக்க வீரர்களான கான்வே இரட்டை சதமும் (227 ரன்), கேப்டன் டாம் லாதம் சதமும் (137) அடித்தனர். ரச்சின் ரவீந்திரா 72 ரன் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் ஷீல்ஸ் , ஆண்டர்சன் பிலிப், ஜஸ்டின் கிரீவ்ஸ் தலா 2 விக்கெட் கைப்பற்றினார்கள்.

**420 ரன்களுக்கு...**

பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 420 ரன்கள் அடித்து ஆல் அவுட்டானது. இதையடுத்து 156 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சில் விளையாடிய நியூசிலாந்து 2 விக்கெட் இழப்பிற்கு 306 ரன்கள் அடித்து டிக்ளேர் செய்தது. இதனையடுத்து 462 ரன்கள் என்ற இமாலய இலக்கை துரத்தி களமிறங்கியுள்ள வெஸ்ட் இண்டீஸ் 4 ஆம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 43 ரன்கள் அடித்தது.

**138 ரன்களில் அவுட்...**

கடைசி நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. மிகவும் பொறுமையுடன் விளையாடிய இந்த தொடக்க ஜோடியை ஜேக்கப் டஃபி பிரித்தார். பிரெண்டன் கிங் 67 ரன்னில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 87 ரன்கள் எடுத்தது. அதனை தொடர்ந்து ஜான் கேம்பல் 105 பந்துகளை சந்தித்து 16 ரன்னில் அவுட் ஆனார். அதனை தொடர்ந்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்தனர். இதனால் வெஸ்ட் இண்டீஸ் அணி 138 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. 87 ரன்களுக்கு முதல் விக்கெட்டை இழந்த வெஸ்ட் இண்டீஸ் அணி அடுத்த 51 ரன்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி தொடரை கைப்பற்றியது.

## ஜேக்கப் புதிய சாதனை

இந்த தொடரின் தொடர் நாயகன் விருதை நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேக்கப் டஃபி தட்டி சென்றார். இந்த தொடரில் 23 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றி உள்ளார். இதன்மூலம் ஒரு ஆண்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனையை ஜேக்கப் டஃபி (81 விக்கெட்டுகள்) படைத்துள்ளார். இதற்கு முன்பு சர் ரிச்சர்ட் ஜான் ஹாட்லி 1985-ம் ஆண்டில் 79 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார். அவரது நீண்டகால சாதனையை ஜேக்கப் முறியடித்துள்ளார். இதன் மூலம் 48 ஆண்டு கால சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

# நியூசி., 2-வது இடத்திற்கு முன்னேற்றம்

நியூசிலாந்து-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முதல் டெஸ்ட் போட்டி டிரா ஆனது. 2-வது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மவுண்ட் மாங்கானுவில் நடைபெற்றது. இந்த போட்டியிலும் நியூசிலாந்து அணி 323 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில் இந்த வெற்றியின் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் நியூசிலாந்து அணி 2-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நியூசிலாந்து அணி மொத்தமாக 3 போட்டிகளில் விளையாடி 2 வெற்றி 1 டிராவுடன் 77.78 சதவீதம் பெற்றுள்ளது. 100 சதவீததுடன் ஆஸ்திரேலியா முதல் இடத்தில் தொடர்கிறது. 3 முதல் 9 இடங்கள் முறையே தென் ஆப்பிரிக்கா, இலங்கை பாகிஸ்தான், இந்தியா, இங்கிலாந்து, வங்கதேசம், வெஸ்ட் இண்டீஸ் ஆகிய அணிகள் உள்ளது.

### சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து
# பிரதமர் நரேந்திர மோடியுடன் நியூசி., பிரதமர் லக்சன் பேச்சு

**புதுடெல்லி, டிச. 23-**

இந்தியா - நியூசிலாந்து இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் உடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில், இந்தியா-நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார். இந்த ஒப்பந்தம் குறித்து பேசிய தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், "இந்தியா-நியூசிலாந்துக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்போது, இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100% வரி விலக்கு அளிக்கப்படும். இது முதலீடுகளை ஊக்குவிக்கும்.

நியூசிலாந்து அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் உற்பத்தி, உள்கட்டமைப்பு, சேவைகள், புத்தாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகிய துறைகளை இலக்காகக் கொண்டு, 20 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டை எளிதாக்க உறுதியளித்துள்ளது.

அடுத்த 20 ஆண்டுகளில் நியூசிலாந்தில் இருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு 1.1 முதல் 1.3 பில்லியன் அமெரிக்க டாலர் வரை உயர்த்த இலக்கு என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது இந்தியா நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் வாயிலாக நியூசிலாந்தில் இருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி 95 சதவீதம் வரை குறைய வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார்.

# தேர்தல் அறிக்கையில் பல்வேறு புதிய அம்சங்கள் இடம் பெறும்
### கனிமொழி எம்.பி. பேட்டி

**சென்னை, டிச. 23-**

தமிழ்நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு தேர்தல் அறிக்கை தயார் செய்யப்படும் என்று கனிமொழி எம்.பி கூறினார்.

2026 சட்டமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவின் முதல் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி தலைமையில் நடைபெற்றது. தி.மு.க.வின் 2026 தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு முடிந்த பின், கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

வரவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி, தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தேர்தல் அறிக்கை குழுவை உருவாக்கி உள்ளார். தேர்தல் அறிக்கை என்பது முதல்வரின் ஆலோசனை பெற்று, தமிழகத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருவாக்கப்படும். குறிப்பாக, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், மகளிர் உரிமைகள், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமியின் பருவ பாதுகாப்பு, விவசாயிகள் பாதுகாப்பு, மத்திய அரசு மக்களிடமிருந்து வேலைவாய்ப்புகளை பறிப்பதையே ஒரு வேலையாக செய்து கொண்டிருக்கும் இச்சூழலில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, மாநில உரிமைகளுக்காகப் போராடுவது போன்ற அம்சங்கள் நிச்சயமாக தேர்தல் அறிக்கையின் மையமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

### நாளை விண்ணில் ஏவப்படும் ராக்கெட்:
# திருப்பதியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தரிசனம்

**திருப்பதி, டிச. 23-**

நாளை விண்ணில் செலுத்தப்படும் புளூ பேர்ட் செயற்கைக்கோள் திட்டம் வெற்றி பெற வேண்டி இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர்.

அமெரிக்காவை சேர்ந்த ஏ.எஸ்.டி., நிறுவனம், தகவல் தொடர்பு சேவைக்காக, 6,500 கிலோ எடையில், 'புளூ பேர்ட்' செயற்கைக்கோளை உருவாக்கி உள்ளது. இது, தொலைதூர கிராமங்களுக்கு, மொபைல் போன், அதிவேக இணையதள சேவைகளை வழங்க உதவும். இந்த செயற்கைக்கோளை, 'இஸ்ரோ' விண்ணில் செலுத்த உள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில், இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மைய ஏவுதளத்தில் இருந்து, நாளை காலை, 8:54 மணிக்கு, எல்.வி.எம்., 3 ராக்கெட் மூலம் 'புளூ பேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இன்று காலை இதற்கான கவுண்ட்டவுன் தொடங்குகிறது.

இந்த நிலையில், விண்ணில் செலுத்தப்படும் புளூ பேர்ட் செயற்கைக்கோள் திட்டம் வெற்றி பெற வேண்டி இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். அப்போது எல்.வி.எம்., 3 ராக்கெட்டின் சிறிய மாதிரியை ஏழுமலையான் சன்னதியில் வைத்து வழிபாடு நடத்தினர். தேவஸ்தான அதிகாரிகள் அவர்களுக்கு பிரசாரதம் வழங்கினர். இதன் பின்னர் திருப்பதி ஏழுமலையான் கோவில் வளாகத்தில் இஸ்ரோ தலைவர் நாராயணன் செய்தியாளர்களை சந்தித்தார்.

## ஸ்மிருதி உலக சாதனை

இந்தியா, இலங்கை பெண்கள் அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது. இந்தப் போட்டியில், இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 25 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்நிலையில், சர்வதேச மகளிர் டி20 கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக ஸ்மிருதி மந்தனா 153 போட்டிகளில் விளையாடி 4,000 ரன்கள் எடுத்துள்ளார்.

இதன்மூலம், சர்வதேச மகளிர் டி20 கிரிக்கெட்டில் 4,000 ரன்கள் குவித்த முதல் இந்திய வீராங்கனை என்ற உலக சாதனையை ஸ்மிருதி மந்தனா படைத்துள்ளார். சர்வதேச அளவில் 2வது வீராங்கனை ஆவார். இதற்கு முன் நியூசிலாந்தைச் சேர்ந்த சுசி பேட்ஸ் மட்டுமே 4000 ரன்களைக் கடந்துள்ளார். மேலும், சர்வதேச மகளிர் டி20 கிரிக்கெட்டில் 4000 ரன்கள் அடித்த முதல் ஆசிய வீராங்கனை என்ற வரலாற்றையும் ஸ்மிருதி மந்தனா படைத்துள்ளார்.

## மோசமான சாதனை சமன்

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3-வது போட்டியில் 82 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது. இந்த தோல்வியின் மூலமாக ஆஸ்திரேலிய மண்ணில் தொடர்ச்சியாக 16 தோல்விகளை இங்கிலாந்து அணி சந்தித்துள்ளது.

'பாஸ்பால்' என்ற இங்கிலாந்து வீரர்களின் அதிரடி பேட்டிங் ஸ்டைல் ஆஸ்திரேலிய மண்ணில் எடுபடவில்லை. மூன்று டெஸ்டிலும் இங்கிலாந்தை ஆஸ்திரேலிய பவுலர்கள் புரட்டியெடுத்து விட்டனர். இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய மண்ணில் கடைசியாக விளையாடிய 18 டெஸ்டுகளில் ஒன்றில் கூட ஜெயிக்கவில்லை. 16-ல் தோல்வியும், 2-ல் டிராவும் கண்டுள்ளது.

நியூசிலாந்து அணி 1985-ம் ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து 18 டெஸ்டுகளில் ஜெயித்ததில்லை. அது தான் ஆஸ்திரேலிய மண்ணில் ஒரு அணியின் வெற்றில்லா நீண்ட பயணமாக இருந்தது. அந்த மோசமான சாதனையை இங்கிலாந்து இப்போது சமன் செய்துள்ளது.

### 9 புதிய காவல் நிலையங்கள் உள்பட
# காவல், தீயணைப்பு துறைகள் சார்பில் ரூ.43.91 கோடி செலவில் கட்டிடங்கள்
### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை, டிச. 23-**

9 புதிய காவல் நிலையங்கள் உள்பட காவல், தீயணைப்பு துறைகள் சார்பில் ரூ.43.91 கோடி செலவில் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, உள் (போக்குவரத்து) துறை ஆகியவற்றின் சார்பில் மொத்தம் ரூ.43.91 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள், 9 புதிய காவல் நிலையங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட 3 காவல் உட்கோட்டங்கள் ஆகியவற்றை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (22.12.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 22 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 16 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 68 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்தார். மேலும், 9 புதிய காவல் நிலையங்களையும், புதிதாக உருவாக்கப்பட்ட உத்திரமேரூர், வேளாங்கண்ணி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய மூன்று புதிய காவல் உட்கோட்டங்களையும் திறந்து வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை காவல்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் 573.05 கோடி ரூபாய் செலவில் 3,418 காவலர் குடியிருப்புகள், 73.65 கோடி ரூபாய் செலவில் 56 காவல் நிலையக் கட்டிடங்கள், 170.19 கோடி ரூபாய் செலவில் 28 காவல்துறை இதர கட்டிடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் 55.19 கோடி ரூபாய் செலவில் 253 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டம் – சிந்தாதிரிப்பேட்டையில் 9 கோடியே 73 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் காவலர் விடுதி; கிருஷ்ணகிரியில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளகாவலர்பல்பொருள் அங்காடி மற்றும் திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டையில் 11 கோடியே 35 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பாளையம் என மொத்தம் 22 கோடியே 8 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறை கட்டிடங்களை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதல்வர் 2025-26-ம் ஆண்டிற்கான காவல் துறை மானியக் கோரிக்கையில், பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், அதிகளவில் தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் நிறைந்த பகுதிகளில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும் புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு காவல் துறையில் கோயம்புத்தூர் மாவட்டம் – நீலாம்பூர், சிவகங்கை மாவட்டம் – கீழடி, திருநெல்வேலி மாவட்டம் – மேலச்செவல், திருப்பூர் மாவட்டம் – பொங்கலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் – களமருதூர், நாமக்கல் மாவட்டம் – கொக்கராயன் பேட்டை, மதுரை மாநகரம் – சிந்தாமணி மற்றும் மாடக்குளம், தருமபுரி மாவட்டம் – புலிக்கரை ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 9 காவல் நிலையங்களை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார். அந்த அறிவிப்பின்படி, காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர், நாகப்பட்டினம் மாவட்டம் – வேளாங்கண்ணி மற்றும் நாமக்கல் மாவட்டம் – பள்ளிப்பாளையம் ஆகிய இடங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று புதிய காவல் உட்கோட்டங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

மேலும், சென்னை மாவட்டம் – செங்குன்றத்தில் 13 கோடியே 54 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான 53 பணியாளர்கள் குடியிருப்புகள்; சென்னை மாவட்டம் – செங்குன்றத்தில் 3 கோடியே 41 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் என மொத்தம் 16 கோடியே 96 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதல்வர் திறந்து வைத்தார். சென்னை மாவட்டம் – புழலில் சென்னை மத்திய சிறை - I மற்றும் மத்திய சிறை - II ஆகிய சிறைகளின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கை முறையே 1250 மற்றும் 2000 ஆகும்.

வேலை நாட்களில் தினமும் சுமார் 700 சிறைவாசிகளின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சிறைவாசிகளை நேர்காணல் காண சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். நீண்ட நேர வரிசையில் நிற்பதைத் தவிர்க்கவும், காத்திருப்பு நேரத்தில் பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கும் பொருட்டும், சென்னை மத்திய சிறை வளாகத்தில் 3300 சதுர அடி பரப்பளவில், 68 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பார்வையாளர்கள் காத்திருப்பு கூடத்தை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவிலில் 4 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு குறித்த https://csr.tn.gov.in/ இணையதளத்தினை நேற்று தொடங்கி வைத்தார்.**

# சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் குட்டி கதை கூறிய த.வெ.க. விஜய்



**சென்னை, டிச. 23-**

சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் குட்டி கதையை த.வெ.க. தலைவர் விஜய் கூறினார்.

மாமல்லபுரம் கிறிஸ்துமஸ் விழாவில் தவெக தலைவர் விஜய் பேசியதாவது:-

அன்பும், கருணையும் இருக்கும் மனசு தான் தாய் மனசு, உண்மையான நம்பிக்கை நல்லிணக்கத்தை விதைக்கும் என்றார்.

அதனை தொடர்ந்து ஜோசப் கதையை பற்றி விஜய் கூறினார். அதில், பைபிளில் நிறைய கதைகள் உண்டு. குறிப்பாக ஒரு கதையில், ஒரு இளைஞருக்கு எதிராக சொந்த சகோதரர்களே பொறாமைப்பட்டு பாழுங்கிணற்றில் தள்ளிவிடுவார்கள். பின் அந்த இளைஞர் மீண்டு வந்து அந்த நாட்டுக்கே அரசனாகி தனக்கு துரோகம் செய்த தனது சகோதரர்கள் மட்டுமின்றி அந்த நாட்டையே காப்பாற்றிய நிறைய கதைகள் உண்டு.

கடவுளின் அருளும், மக்களை மானசீகமாக நேசிக்கும் அன்பும், அதீத வலிமையும், உழைப்பும் இருந்துவிட்டாலே போதும்.. எவ்வளவு பெரிய எதிரிகளையும் ஜெயிக்கலாம் என்பதையே இக்கதைகள் உணர்த்துகின்றன. படிக்காதவங்க படிச்சி பாருங்க என்றார்.


# சினிமா CiNi செய்திகள்

## விக்ரம் பிரபுவின் 25-வது படம் 'சிறை'



சிறை விக்ரம் பிரபுவின் 25 வது படமாக வெளியாகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகை வெளியீடாக வரும் டிசம்பர் 25 ஆம் தேதி வெளியாகும் இப்படத்தில் விக்ரம் பிரபு போலீஸ் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இது அவர் நடிக்கும் நான்காவது போலீஸ் படமாகும்.. உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு உருவாகியுள்ள 'சிறை' படம் குறித்து நடிகர் விக்ரம் பிரபு கூறுகையில், "'சிறை' எனது 25 வது படமாக வெளியாவது மகிழ்ச்சி. உண்மை சம்பவத்தை மையமாக கொண்ட இந்த படத்தில் நான் போலீஸாக நடித்திருந்தாலும், என் தோற்றம் மற்றும் நடிப்பில் பெரிய வித்தியாசத்தை பார்ப்பீர்கள். இயக்குநர் தமிழ் அவரது வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு இந்த கதையை எழுதியிருக்கிறார். அவர் மீது நம்பிக்கை வைத்து தான் இந்த படத்தில் நடித்தேன், அவர் சொன்னது போலவே படம் நன்றாக வந்திருக்கிறது. இயக்குநர் சுரேஷ், இயக்குநர் வெற்றி மாறனிடம் நீண்ட வருடங்களாக இணை இயக்குநராக பணியாற்றியவர், அவரது அனுபவம் இந்த கதையை மிக நேர்த்தியாக கையாள வைத்திருக்கிறது என்றார்.

## டிசம்பர் 25-ம் தேதி வெளியாகும் 'பருத்தி'



கோதண்டம் & கோ மற்றும் லட்சு கணேஷ் தயாரிப்பில் உருவாகியிருக்கும் படம் பருத்தி. குரு.ஏ, எழுதி இயக்கியிருக்கும் இப்படத்தில் சோனியா அகர்வால் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி டிசம்பர் 25 ஆம் தேதி வெளியாகும் நிலையில், இப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் தயாரிப்பாளர் நடிகர் கோதண்டம் பேசுகையில், பருத்தி நல்ல படம். இப்படத்தை முழுக்க கஷ்டபட்டு எடுத்துள்ளோம் அனைவரும் ஆதரவு தாருங்கள் என்று கேட்டுக்கொண்டார். இயக்குநர் குரு.ஏ பேசுகையில், "இப்படத்தில் நட்பு பற்றி பேசியுள்ளோம். சின்ன வயதில் குழந்தைகள் மனதில் சாதி எனும் விதையை விதைக்கக் கூடாது என பேசியுள்ளோம் என்றார். பின்னர், சோனியா அகர்வால் பேசுகையில், "பருத்தி எனக்கு மிக வித்தியாசமான அனுபவத்தை கொடுத்திருக்கிறது. டார்க் மேக்கப் போட்டு நடித்திருக்கிறேன். நான் இயக்குநரிடம் இங்கு இருந்து யாரையாவது நடிக்க வைக்கலாமே எனக் கேட்டேன் ஆனால் உங்களுடைய அனுபவமும் நடிப்பும் இந்தப் படத்திற்கு வேண்டும் என்றார் என்று கூறினார்.

## புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டத்தால் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது

### கிறிஸ்துமஸ் விழாவில் அமைச்சர் பெருமிதம்




**ஒட்டன்சத்திரம், டிச. 23-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்துவ பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தையும், மாணவர்களுக்கு ரூ1000 வழங்கும் தமிழ் புதல்வன் திட்டத்தையும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். இதனால் உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்துள்ளது. விரைவில்

20 லட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கப்பட உள்ளது. தமிழ்நாடு அரசின் திட்டங்களை மாணவ மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள் என கூறினார். இந்நிகழ்வில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், கிறிஸ்தவகல்வி நிறுவனங்களின் தாளாளர் மருத்துவர் டாம் பிரதீப் செரியன், கல்லூரி பொருளாளர் நிர்மலா ஜெயராஜ், கல்லூரி செயலாளர் மைக்கேல் எம். குமார், அம்பிளிக்கை கிறிஸ்தவ மருத்துவமனை தலைமை மருத்துவர் ஓ.பி. செரியன், கல்லூரியின் முதல்வர் பரிமளகீதா, பாலிடெக்னிக் முதல்வர் தினகரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஸ்டார்லிட் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. படம்.திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்துவ பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் அமைச்சர் அர. சக்கரபாணி கலந்து கொண்டார்.


## 'கொம்புசீவி' திரை விமர்சனம்



வைகை அணை கட்டுமானத்தின்போது பாதிப்புக்கு உள்ளான 12 கிராம மக்களின் அவல நிலையை எடுத்துச் சொல்லும் படமே கொம்புசீவி. அதில் ஒரு கிராமத்தில் இருந்து வாழ்வாதாரத்தையும் பெற்றோரையும் இழந்த சண்முக பாண்டியன், சிறு வயதில் சரத்குமாருடன் வேலைக்கு சேர்ந்து அவருடன் தவறான செயல்களில் ஈடுபட்டு வருகிறார். பண மெத்தையில் படுக்க வேண்டும், என்று ஆசைப்படும் சண்முக பாண்டியனின் ஆசையை சரத்குமார், நிறைவேற்றினரா இல்லையா என்பது தான் 'கொம்புசீவி' படத்தின் கதை. கதையின் நாயகனாக நடித்திருக்கும் சண்முக பாண்டியன், ஆக்ஷன் மற்றும் ஹீரோவுக்கான அனைத்து அம்சங்களும் நிறைந்தவராக சிறப்பாக நடித்திருக்கிறார். நாயகனுக்கு இணையாக இருக்கும் சரத்குமாரின் கதாபாத்திரம் மற்றும் அவரது நடிப்பு படத்திற்கு பெரும் பலம் சேர்த்திருக்கிறது. நாயகி நடிகை தார்னிகா, காவல்துறை அதிகாரியாக மிடுக்காகவும், அழகாகவும் மிளிர்கிறார். காளி வெங்கட், ஜார்ஜ் மரியான், கல்கி ராஜா சுஜித் சங்கர், விஜே ஐஸ்வர்யா, ராம்ஸ் உள்ளிட்ட அனைவரும் கொடுத்த சிறப்பாக நடித்திருக்கிறார்கள். யுவன் சங்கர் ராஜாவின் இசை சுமார் ரகமே. எழுதி இயக்கியிருக்கும் பொன்ராம், வழக்கமான பாணியில் பயணிக்காமல் தடம் மாறியிருப்பது படத்தில் தெரிகிறது.

பலருக்கு நன்மை பயக்கும் வகையில் அணை கட்டப்பட்டு இருந்தாலும், அதனால் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களின் வலியை அழுத்தமாக பதிவு செய்யாமல் விட்டிருப்பது படத்தின் பலவீனத்தை காட்டுகிறது.

## 'டாக்ஸிக்' திரைப்படத்தின் கியாரா அத்வானியின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு



2026-ம் ஆண்டின் மிகப் பெரிய எதிர்பார்ப்பு மிக்க படங்களுள் ஒன்றாகக் கருதப்படும், கேஜிஎஃப். யாஷ் நடிக்கும் 'டாக்ஸிக்: எ ஃபேரி டேல் ஃபார் கிரோன்-அப்ஸ்', இந்த திரைப்படத்தில், கியாரா அத்வானி யின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்ட்டர் சமீபத்தில் வெளியானது. பல்வேறு ஜானர்களில் தனது திறமையை நிரூபித்து, இந்தி திரையுலகின் மிக முக்கிய நடிகைகளில் ஒருவராக திகழும் கியாரா அத்வானி, இந்தப் படத்தில் முற்றிலும் புதிய பரிமாணத்தில் தோன்றுகிறார். KGF மூலம் பாக்ஸ் ஆபீஸில் வரலாறு படைத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, யாஷ் மீண்டும் பெரிய திரைக்கு திரும்பும் படம் இதுவாகும். வெங்கட் K. நாராயணா மற்றும் யாஷ் இணைந்து *KVN Productions* மற்றும் *Monster Mind Creations* சார்பில் தயாரிக்கும் 'டாக்ஸிக்: எ ஃபேரி டேல் ஃபார் கிரோன்-அப்ஸ்', வரும் மார்ச் 19-ம் தேதி அன்று, திரையரங்குகளில் வெளியாக உள்ளது




**திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூரில் அ.தி.மு.க. மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் பரமசிவம் ஏற்பாட்டின் பேரில் வாய்ஸ் ஆப் யூத் என்ற புதிய செயலியை கட்சி பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார். உடன் அமைப்பு செயலாளர் மருதராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி, மாவட்ட விவசாய அணி செயலாளர் ராஜமோகன், திண்டுக்கல் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் ராஜமோகன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட பாசறை செயலாளர் சிவ பாரதி மற்றும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் உள்ளனர்.**

## 'அவதார் ஃபயர் அண்ட் ஆஷ்' திரை விமர்சனம்



பெரு வெற்றி பெற்ற அவதாரின் இரண்டு பாகங்களை தொடர்ந்து மூன்றாவது பாகமான வந்திருக்கும் அவதார் நெருப்பு மற்றும் சாம்பலை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றாம் பாகத்தில், நாயகன் வொர்திங்டனுடன் வாழும் தனது மகன் ஸ்பைடரை அழைத்துச் செல்வதோடு, அவரை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மீண்டும் பண்டோரா மீது வில்லன் ஸ்டீபன் லாங் நவி இன மனிதராக படையெடுத்து வருகிறார். இந்த முறை அதிநவீன ஆயுதங்களுடன், பண்டோராவில் வாழும் மற்றொரு நவி இன மனிதர்களான சாம்பல் பகுதி மனிதர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு போரிடும் வில்லன் ஸ்டீபன் லாங் நினைத்தது நடந்ததா ? இல்லையா ? என்பதை வழக்கம் போல் காட்சி விருந்து படைத்திருப்பதே 'அவதார் : ஃபயர் அண்ட் ஆஷ்' படம். இந்த மூன்றாம் பாகம் மிகப் பெரிய காட்சி விருந்தாக பார்வையாளர்களை பரவசப்படுத்துகிறது. இயக்குநர் ஜேம்ஸ் கேமரூனின் கற்பனை அசாதரணமானதாக உருவாகி 3டி-யில், பெரிய திரையில் அந்த காட்சிகளை பார்க்கும் போது, புதிய சினிமா அனுபவம் கிடைக்கிறது. சைமன் ஃப்ராங்க்லனின் *(Simon Franglen)* பின்னணி இசை கிராபிக்ஸ் காட்சிகளுக்கு உயிர் கொடுக்கும் விதத்தில் பயணித்திருக்கிறது. ரஸ்ஸல் கார்பெண்டரின் *(Russell Carpenter)* ஒளிப்பதிவில் நெருப்பு மற்றும் சாம்பல் நிறங்களை வெளிக்காட்டும் வண்ணங்கள், இதுவரை பார்த்த அவதார் பாகங்களில் இருந்து முற்றிலும் காட்சிகளை வித்தியாசப்படுத்தி காட்டுகிறது.

## பிரபாஸ் தொடங்கி வைத்த சர்வ தேச குறும்பட விழா



இந்திய ரெபெல் ஸ்டார் பாகுபலி நாயகன் பிரபாஸ், தி ஸ்கிரிப்ட் கிராஃப்ட் இன்டர்நேஷனல் ஷார்ட் ஃபிலிம் பெஸ்டிவலை சமீபத்தி வீடியோ மூலம் அறிமுகப்படுத்தினார். இந்த சர்வ தேச குறும்பட விழா பற்றி அவர் கூறுகையில், இதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள படைப்பாளிகளுக்கு நேரடியாக தயாரிப்பாளர்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

ஒவ்வொரு குரலும் ஒரு ஆரம்ப வாய்ப்புக்கு தகுதியானது.

ஒவ்வொரு கனவுக் கதைக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்க வேண்டியது அவசியம். *#TheScriptCraft* சர்வதேச குறும்பட திரைப்பட விழா இது இங்கே உங்களுக்காக, உலகம் முழுவதிலிருந்தும் கதை சொல்லிகளை தங்கள் பயணத்தைத் தொடங்க அழைக்கிறது.



**அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட அ.தி.மு.க. தலைமை கழகத்தில் முன்னாள் அமைச்சர்கள் கோகுல இந்திரா, வைகைச்செல்வன் ஆகியோரிடம் விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் முன்னிலையில் அருப்புக்கோட்டை கலை இலக்கிய அணி செயலாளர் சீனிவாசன் மற்றும் நகர மகளிர் அணி செயலாளர் பிரேமா ஆகியோர் விருப்பமனு தாக்கல் செய்தார். அருகில் அருப்புக்கோட்டை நகர கழகச் செயலாளர் சோலை சேதுபதி, ஒன்றிய செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.**

## அருப்புக்கோட்டையில் வாக்காளர் என்பதை உறுதி செய்வீர் விழிப்புணர்வு பேரணி



**அருப்புக்கோட்டை, டிச. 23-**

அருப்புக்கோட்டையில் வாக்காளர் சிறப்பு தீவிரத் திருத்தம் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத தகுதியான வாக்காளர்களை பட்டியலில் சேர்க்கும் வகையில், "வாக்காளர் என்பதை உறுதி செய்வீர்" என்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

விழிப்புணர்வு பேரணியை அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம், தாசில்தார் செந்தில்வேல் முன்னிலையில் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் மாரிமுத்து கொடியசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் சௌடாம்பிகா பாலிடெக்னிக் மாணவர்கள்,நகராட்சி, வருவாய்த்துறை பணியாளர்கள் கலந்து கொண்டனர். பேரணி பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதி வழியாக சௌடாம்பிகா பாலிடெக்னிக் சென்றடைந்தது. வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை நகராட்சி மற்றும் வருவாய்த் துறையினர் செய்திருந்தனர்.




**சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மதுரை மாநகர் மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிட விருப்பம் தெரிவித்து அ.தி.மு.க. தலைமை கழக பேச்சாளரும், அண்ணா தொழிற்சங்க பேரவை மதுரை மாவட்டத்தலைவருமான எம்.எஸ்.கே.மல்லன் தலைமை கழக நிர்வாகி கமலக்கண்ணனிடம் தனது விருப்பம் மனுவை தாக்கல் செய்தார்.**



**அகில இந்திய விடுதலை சிங்கங்கள் கட்சியின் மதுரை மாநகர மாவட்டவடக்கு சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் மேலமடை பகுதியில் கட்சியின் நிறுவனர் வழக்கறிஞர் கே.குமரதேசிகன் தலைமையிலும், கே.ரஞ்சித், முருகன், நாகலிங்கம் பால்ராஜ் கர்னா முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் கலந்து கொண்டு பேசினார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், எழுத்தாளரும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறையின் உதவி பதிப்பாசிரியருமான வெண்ணிலா தொகுத்த 'இந்தி எதிர்ப்புப் போராட்டம் - முழுமையான அரசு ஆவணங்கள்' என்ற நூலை வெளியிட, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 22 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 16 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 68 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்தார். மேலும், 9 புதிய காவல் நிலையங்களையும், புதிதாக உருவாக்கப்பட்ட உத்திரமேரூர், வேளாங்கண்ணி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய 3 புதிய காவல் உட்கோட்டங்களையும் அவர் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 86.40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவுநேர காப்பகத்தினை திறந்து வைத்து, காப்பகத்தில் தங்கிடும் 86 நபர்களுக்கு பாய், தலையணை, படுக்கைவிரிப்பு உள்ளிட்ட உதவி தொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னை மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக்கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் 2025-ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி நேற்று, எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் 3 கோடியே 75 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

### 10 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக

# அரசு ஊழியர் சங்க பிரதிநிதிகளுடன் மூன்று அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

**சென்னை, டிச. 23-**

10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி வரும் நிலையில், அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் உடன் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

பழைய ஓய்வூதிய திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புவது என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் உடன் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள், இடைநிலை, முதுநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊழியம், சம வேலை சம ஊதியம், பதவி உயர்வு உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கை தொடர்பாக அமைச்சர்களுடன் அரசு ஊழியர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# பிரதமர் மோடியுடன் நிதீஷ் சந்திப்பு

**புதுடெல்லி, டிச. 23-**

2 நாட்கள் பயணமாக டெல்லி சென்றுள்ள பீகார் மாநில முதல்வர் நிதீஷ் குமார் அங்கு பிரதமர் மோடியை சந்தித்து பேசினார்.

பீகார் முதல்வர் நிதீஷ் குமார் 2 நாட்கள் பயணமாக ஞாயிற்றுக்கிழமை டெல்லி சென்றுள்ளார். இந்தப் பயணத்தின்போது, பிரதமர் மோடி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மூத்த தலைவர்களைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேற்றுகாலை சந்தித்துப் பேசினார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று மாலை பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது பீகார் துணை முதல்வர் சாம்ராட் சௌத்ரி, மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். பீகாரில் ஐக்கிய ஜனதா தளம் - பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை அமைத்துள்ள நிலையில் மாநில அமைச்சரவை விரிவாக்கம் தொடர்பாக பேச நிதீஷ் குமார் தில்லி சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சமீபமாக முதல்வராக பதவியேற்ற பிறகு நிதீஷ் குமாரின் முதல் டெல்லி பயணம் இதுவாகும்.



# பெரியாறு அணை உறுதித்தன்மை குறித்து 12 நாட்கள் ஆய்வு

**சென்னை, டிச. 23-**

முல்லை பெரியாறு அணையின் உறுதி தன்மை ஆய்வு பணி தொடங்கியுள்ள நிலையில் அடுத்த 12 நாட்கள் ஆய்வு பணிகள் நடக்கிறது.

கேரள மாநில எல்லைப் பகுதியில் உள்ள முல்லை பெரியாறு அணை மூலம் தேனி மாவட்டம் கம்பத்தில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் நெல்சாகுபடி நடக்கிறது. முக்கிய குடிநீர் ஆதாரமாக இருப்பதுடன், பாசனத்திற்கு போக உபரியாக வைகை அணைக்கு திறக்கப்படும் நீர் மூலம் மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய 5 மாவட்டங்களில் விவசாய பணிகளும் நடக்கிறது.

இந்தநிலையில் முல்லை பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாக கேரள மாநில அரசும், சில தன்னார்வ அமைப்புகளும் கூறி வருகின்றனர். இதையடுத்து கடந்த 2011-ம் ஆண்டு ரிமோட் மூலம் இயக்கப்படும் ஆர்.ஓ.வி. நீர்மூழ்கி கலத்தை பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அணை பலமாக இருப்பதால் அச்சப்பட தேவையில்லை என சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், 14 ஆண்டுகளுக்கு பின்னர் 2-வது முறையாக முழுமையாக ஆய்வு நடத்துவதற்காக மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் டெல்லியில் உள்ள மத்திய மண் மற்றும் பொருட்கள் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆர்.ஓ.வி. நீர் மூழ்கி கலம் வரவழைக்கப்பட்டு தமிழக நீர்வளத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

ரூ.25 லட்சம் மதிப்பில் நடக்கும் ஆய்வுக்காக சுமார் 7 பேர் கொண்ட வல்லுனர் குழுவுடன், இரு மாநில அதிகாரிகள் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) அணையில் 250 மீட்டர் நீருக்கு அடியில் அணையின் உட்புறம், முன்புறப்பகுதிகளில் ஆய்வு நடக்க உள்ளது. தினசரி 20 மீட்டர் மட்டுமே ஆய்வு செய்ய முடியும் என்பதால் 12 நாட்கள் வரை இந்த ஆய்வு நடக்க இருப்பதாக நீர்வளத்துறை அதிகாரிகள் கூறினர்.



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் தெப்பக்குளத்தில் நடைபெற்ற புதிய வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.